'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.



Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 237 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 08ஆம் திகதி திங்கட்கிழமை (22.05.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 01, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

# செப். மாதத்துக்குள் கடன் மறுசீரமைப்பு



## கேகாலையில் பாரிய நீர் விநியோகத் திட்டத்தை திறந்துவைத்து ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

•நமது நிருபர்

எமது நாட்டின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்குள் வெற்றியடையச் செய்து பொருளாதாரத்தை ஒரு குறிப்பிட்ட ஸ்திரமான நிலைக்கு கொண்டுவர முடியுமென நம்பிக்கை வெளியிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்களவரானாலும் சரி, தமிழரானாலும் சரி பெருமையுடன் கௌரவமாக வாழ விரும்புவதாகச் சுட்டிக்காட்டினார்.

கேகாலை அரநாயக்க 'அசுபினி' எல்ல நீர் விநியோகத் திட்டத்தை பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் (20) கலந்துகொண்டபோதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

கேகாலை மாவட்டத்தின் அரநாயக்க, மாவனெல்லை, ரம்புக்கனை ஆகிய பிரதேச செயலகங்களுக்குரிய 135 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நிலவிய குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அரசாங்கத்தின் 3,847 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு, நெதர்லாந்து அரசாங்கத்தின் 18,650 மில்லியன் ரூபா கடனுதவியின் கீழ் இந்த நீர் விநியோகத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

02 பக்கம்

## பொது வேட்பாளரை முன்னிறுத்த தயார்

### அமைச்சர் பிரசன்ன

ஜனாதிபதித் தேர்தலுக்கு முகங்கொடுக்க அரசாங்கமும் தமது கட்சியும் தயாராக இருப்பதாக ஆளுங்கட்சியின் பிரதான அமைப்பாளரும் நகர அபிவிருத்தி வீடமைப்புத்துறை அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தியுள்ளார்.



இதன்படி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டுக்காக உழைக்கக் கூடிய பொது வேட்பாளரை முன்னிறுத்தவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், அவர் நிச்சயமாக நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக வருவார் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

02 பக்கம்

## அடுத்த ஜனாதிபதியாக ரணிலை தெரிவுசெய்க

### ருவன் விஜேவர்தன

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் இடம்பெறவுள்ளதுடன் அந்தப் பதவிக்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே தெரிவுசெய்யப்படவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார். அந்தத் தீர்மானம் நாட்டின் நலன் கருதி எடுக்கப்படவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



02 பக்கம்

## பாலியல் குற்றம் புரிந்த போலிச் சாமியார் கைது

### முல்லையில் கஞ்சா, கசிப்பு கொடுத்து யுவதி மீது துஷ்பிரயோகம்



•வன்னி செய்தியாளர்

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் போலிச் சாமியாரால் 20 வயதான யுவதிக்கு கஞ்சா கலந்து தயாரிக்கப்பட்ட ரொட்டி கொடுத்து கசிப்பும் அருந்த வைத்து, துஷ்பிரயோகப்படுத்தியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

முத்தையன்கட்டு, ஜீவநகரில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட யுவதியும் பெற்றோரும் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முத்தையன்கட்டைச் சேர்ந்த 20 வயதான யுவதிக்கு வயிற்றுவலி ஏற்பட்டுள்ளது.

02 பக்கம்

## சிங்கப்பூர் ஜப்பானுக்கு ஜனாதிபதி பயணம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை இன்று மேற்கொள்ளவுள்ளார். சிங்கப்பூரில் அந்நாட்டுப் பிரதமர் லீசியென் லூங் உள்ளிட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடவுள்ளார். மேல் மாகாண அபிவிருத்தித் திட்டத்துக்கு சிங்கப்பூரின் ஒத்துழைப்பு...

02 பக்கம்

## வவுனியாவில் 1000 ஏக்கரில் கரும்புச் செய்கைக்கு திட்டம்

### சீனப் பின்னணி குறித்து இந்தியா அதிருப்தி

•நமது நிருபர்

வவுனியாவில் அமைக்க அனுமதி கோரப்பட்டுள்ள கரும்புப் பண்ணையுடனான சீனித் தொழிற்சாலையின் பின்னணி தொடர்பில் சந்தேகமடைந்துள்ள இந்தியா, அது குறித்தான தனது கரிசனையையும் இலங்கை அரசிடம் வெளிப்படுத்தியிருப்பதாக நம்பகமாக அறியமுடிந்தது.

வவுனியா வடக்கு பகுதியில் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு செய்கையும் சீனித் தொழிற்சாலையும் அமைக்கும் திட்டம் அரசின் மூலம்



வேகமாக நகர்த்தப்பட்டு வருகிறது.

ஏழு வருடங்களுக்கு முன்னர் வடமாகாண சபை ஆட்சிக்காலத்தில் இதே தரப்புகள், இவ்வாறான திட்டத்தை முன்னெடுத்தபோதும் அது வெற்றியளிக்கவில்லை. அப்போதைய வடமாகாண சபை அதை நிராகரித்திருந்தது.

அப்போதைய விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அதனைக் கடுமையாக எதிர்த்தார். ஐங்கரநேசன் சக்தி வாய்ந்த அமைச்சராக இருந்ததால் அவரது எதிர்ப்பை...

02 பக்கம்

## உஷ்



சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் போதகர் ஜெரோமுக்கும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்துக்கும் தொடர்புகள் இருப்பதாகவும் அந்த தொடர்புகள் குறித்து விசாரணை நடத்தப்படவேண்டுமெனவும் தரப்பொன்று சி.ஐ.டியிடம் கடந்த வாரம் முறையிட்டதல்லவா?

அந்த தரப்பை சி.ஐ.டி யினரிடம் அனுப்பியதன் பின்னணியில் ஜனாதிபதி ஊடகப்பிரதானி ஒருவர் இருப்பதாகவும் அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் முன்னாள் பிரதமர் மஹிந்த, ஜனாதிபதி ரணிலிடம் சில தினங்களுக்கு முன்னர் தொலைபேசியில் தெரிவித்ததாக தகவல்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக ரணில், மஹிந்தவிடம் உறுதியளித்துள்ளாராம்.

## சிறுமியை கடத்தும் முயற்சி தோல்வி

### பண்டாரவளையில் பொலிஸார் தீவிர விசாரணை

•கே. சுபானி

பண்டாரவளைப் பகுதியில் பாடசாலை மாணவியொருவரை கடத்தும் முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளதுடன் கடத்துவதற்கு...

02 பக்கம்

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்துக

### இலங்கை மீது குற்றஞ்சுமத்தி அமெரிக்க செனட் சபை உறுப்பினர்கள் பிரேரணை

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முற்படுத்த வேண்டும், இலங்கையில் உள்ள அனைத்து மக்களின் ஜனநாயக உரிமைகளையும் உறுதிப்படுத்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பவை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை உள்ளடக்கிய பிரேரணையை அமெரிக்க செனட் சபை உறுப்பினர்கள் ஐவர் சமர்ப்பித்துள்ளனர். வரலாற்று ரீதியாக அடக்கப்பட்டுள்ள இலங்கையின் வடக்கு, கிழக்கு பிராந்தியத்தின் அரசியல் உரிமைகளையும் பிரதிநிதித்துவத்தையும் நியாயப்படுத்துமாறும் இனப்பிரச்சினைக்கு வித்திடக் காரணமானவற்றுக்கு தீர்வு காண்பதன் பொருட்டும் நிரந்தரமான அரசியல் தீர்வுக்காக பணியாற்றுமாறும் சர்வதேச சமூகத்தை அந்தப் பிரேரணை வலியுறுத்துகிறது.

02 பக்கம்

பணிப்பெண் உயிரிழந்த விவகாரம்

## நான்கு பொலிஸார் அதிரடி இடைநிறுத்தம்

•அஷ்ரப் ஏ. சமத்

வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் பெண் பொலிஸார் மூவருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## ஜீவன் முறியடித்த ரணிலின் சாதனை

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

நாட்டில பாதிப்பிரச்சினை ஆசாமிகளால..
மீதிப்பிரச்சினை போலிச் சாமியார்களால!



நீங்கள் வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணத்தை மக்கள் வங்கிக்கு அனுப்பி பெரும் வெற்றி காணுங்கள்




ஆண்டிறுதியில் மாபெரும் சீட்டிழுப்பில் முதல் வெற்றியாளருக்கு

ரூ.10,000,000/-

உடன் மேலும் பணப்பரிசுகள்

இரண்டாவது பணப்பரிசு ரூ. 3 மில்லியன்
மூன்றாவது பணப்பரிசு ரூ. 2 மில்லியன்
மாதாந்த வெற்றியாளருக்கு ரூ. 1 மில்லியன்
வாராந்த வெற்றியாளருக்கு ரூ. 100,000/-

+94 70 1750 017
தொ.பே.: +94 112 031 001

* நிபந்தனைகளுக்குட்பட்டது

செல்லுபடியாகும் காலம் 2023 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை மட்டுமே.

www.peopleslank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
Pride of the Nation

# நெல் விவசாயிகளுக்கு இன்று முதல் வவுச்சர்

சிறு போகத்தில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு உரம் கொள்வனவு செய்வதற்கான மானிய வவுச்சர்கள் வழங்கும் நடவடிக்கை இன்று (22) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறு போகத்தில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு இரசாயன அல்லது சேதன உரங்களை கொள்வனவு செய்வதற்கு மானிய வவுச்சர்கள் வடிவில் நிதி ஒதுக்கீடுகளை வழங்க அரசாங்கம் அண்மையில் தீர்மானித்திருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியின் பிரகாரம் 650,000 விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஹெக்டெயருக்கு 20,000 ரூபா மானியமாக வழங்கப்படவுள்ளது.

மேலும், விவசாயிகளின் விருப்பத்துக்கிணங்க, இரண்டு அரச உர நிறுவனங்களின் மூலம் வழங்கப்படும் இரசாயன அல்லது சேதன உரங்களை அனைத்து கமநல சேவை நிலையங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் கொள்முதல் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# ஷாப்டரின் உடல் மே 25 இல் தோண்டி எடுக்கப்படும்

## பொலிஸார் தகவல்

பொரளை மயானத்தில் மர்மமான முறையில் உயிரிழந்த தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் உடல் நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் 25ஆம் திகதி தோண்டி எடுக்கப்படவுள்ளது. இந்நிலையில், அவரது பூதவுடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பைச் சேர்ந்த வர்த்தகரான தினேஷ் ஷாப்டர் டிசம்பர் 15 ஆம் திகதி பொரளை பொது மயானத்தில் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் காருக்குள் காணப்பட்டதுடன், பின்னர் தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

இதன்படி தினேஷ் ஷாப்டர் படுகொலை விவகாரத்தில், சுமார் 100 இற்கும் மேற்பட்ட வாக்கு மூலங்கள் வரை பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜீவன் முறியடித்த...

இளம் அமைச்சராக தான் சில பணிகளை நிறைவுசெய்ததாகவும் இந்தச் சாதனையை தற்போது தன்னைவிட இளம் வயதில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் முறியடித்து, அந்த சாதனையை தன்வசப்படுத்தியுள்ளார் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், இளம் தலைமுறையினர் இவ்வாறான சாதனையை செய்ய முன்வர வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சுமார் 169,000 மக்களின் சுத்தமான குடிநீர்த்தேவையை பூர்த்தி செய்யும் கேகாலை, அரநாயக்க நீர் விநியோகத் திட்டம் ஜனாதிபதியினால் மக்களிடம் நேற்றுமுன்தினம் (20) கையளிக்கப்பட்ட நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் கபீர் ஹாஷிமினால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டம் அடுத்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டது. அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பதவிக் காலத்தில் அத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. நான் செய்த ஒரு சாதனையை அமைச்சர் ஜீவன் தொண்டமான் முறியடித்துள்ளார். இந்த நாட்டிலேயே இளம் அமைச்சர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். அதற்கு முன்னர் நான் தான் அந்த சாதனைக்கு உரிமையாளனாக இருந்தேன். தற்போது அந்த சாதனையை ஜீவன் தொண்டமான் செய்துள்ளார். இளம் தலைமுறையினர் இவ்வாறு முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

## அடுத்த ஜனாதிபதியாக...

"நாட்டின் பொருளாதார நெருக்கடி குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்று ஆண்டுகளுக்கு முன்பே கணித்தார். கொவிட் தொற்றுநோய் பரவலுக்கு முன்பே அவர் பொருளாதார வீழ்ச்சி குறித்து எச்சரிக்கை விடுத்திருந்தார். அவரால் நாட்டை முறையான வகையில் ஸ்திரப்படுத்த முடிந்தது.

அனைத்து கட்சிகளும் அரசியல் வேறுபாடுகளை மறந்து நாட்டுக்கு சார்பான தேசிய கொள்கைகளை உருவாக்க ஒன்றுபட வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர்கள் எம்முடன் இணைவது மகிழ்ச்சியைத் தருகிறது என்றார்.

## சிங்கப்பூர், ஜப்பானுக்கு...

மற்றும் விரிவான திட்டங்களுக்கு இதன்போது முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

இதேவேளை, ஜப்பானுக்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்நாட்டுப் பிரதமர் புமியோ கிஷ்டா உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன் அந்நாட்டில் வாழும் இலங்கை வர்த்தக சமூகத்தினருடனான சந்திப்பும் இடம் பெறவுள்ளது.

## பணிப்பெண் உயிரிழந்த...

பதுளையைச் சேர்ந்த 41 வயதான பெண்ணொருவர் பொலிஸ் தடுப்புக்காவலில் இருந்த போது உயிரிழந்த சம்பவம் தொடர்பிலேயே பொலிஸ் தலைமையகத்தினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவிக்கையில், பதுளையைச் சேர்ந்த 41 வயதுடைய பெண் கொழும்பில் உள்ள சினிமா படத் தயாரிப்பாளர் ஒருவரின் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டார்.

அந்த வீட்டில் இருந்த தங்க நகைகள் காணாமல் போனதையடுத்து வீட்டு உமையாளரினால் கடந்த 11 ஆம் திகதி வெலிக்கடை பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இதனையடுத்து அந்தப் பணிப்பெண்ணை கைது செய்து விசாரணைக்காக பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அதன் பின்னர் அப்பெண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்துள்ளார். மேற்படி சம்பவம் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் தலைமையில் பொலிஸ் விசாரணை இடம்பெற்று வருகின்றது.

அத்துடன் இறந்த பெண்ணின் பிரேத அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. அதன் நிமித்தம் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் 3 பெண் பொலிஸார் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## சிறுமியை கடத்தும்...

முயன்று தப்பிச்சென்ற சந்தேக நபர்களைத் தேடி பொலிஸாரால் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பண்டாரவளையில் பிரசித்திபெற்ற பாடசாலையில் தரம் 6இல் கல்வி கற்றுவரும் 10வயதுடைய மாணவி, வேனில் வந்த இனந்தெரியாத குழுவொன்றால் கடத்த முயற்சிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து பண்டாரவளை பொலிஸார் தெரிவிக்கையில்,

பண்டாரவளை, துஹூல்கொல்ல பிரதேசத்தில் வசிக்கும் குறித்த மாணவி கடந்த 19ஆம் திகதி பாடசாலை முடிந்து வீடுசெல்வதற்காக பஸ் தரிப்பிடத்துக்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது, பாடசாலையிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் வெள்ளை நிற வேனொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்துள்ளது.

அப்போது கறுப்பு நிற கைக்குட்டையால் முகத்தை மறைத்திருந்த இளைஞரொருவர் மாணவியின் அருகில் வந்து "அம்மா நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். உங்களுக்கு இந்த சொக்லெட்டை கொடுத்து வேனில் அழைத்து வரச் சொன்னார்" என குறித்த இளைஞன் மாணவியிடம் தெரிவித்துள்ளார்.

தனது தம்பி கல்வி கற்கும் பாடசாலைக்கு தனது தாய் செல்வதாக முதல்நாள் தெரிவித்தது மாணவிக்கு நினைவுக்கு வந்தது. இதனையடுத்து அச்சத்தில் படிப்பாதையூடாக பண்டாரவளை நகரிலுள்ள தனக்கு தெரிந்த நகைக்கடையொன்றுக்கு ஓடித் தப்பியுள்ளார்.

அதன்பின்னர் தாயுடன் பொலிஸ் நிலையத்துக்கு சென்று முறைப்பாடளித்துள்ளார்.

இந்நிலையில் கடத்தல் முயற்சியில் ஈடுபட்ட சந்தேகநபரை கைதுசெய்வதற்கான விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். விசேடமாக பாடசாலையை அண்மித்த நகரத்தில், வீதியில் செல்லும், வேறுபட்ட வகையான கதைகள் கூறும் இனந்தெரியாதோரிடம் உரையாடவேண்டாம் என்றும் அவ்வாறானோர் கொடுக்கும் சொக்லெட், டொபி, பிஸ்கட் மற்றும் குளிர்பான வகைகளை உண்ணவோ அருந்தவோ வேண்டாம் எனவும் மாணவர்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பொது வேட்பாளரை...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை (19) உடுகம்பளையில் பிரசன்ன ரணதுங்கவின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,

தற்போது நாடு எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருகிறது. நாட்டின் இயல்பு வாழ்க்கை திரும்பி வருகிறது. அதற்குக் காரணம் தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான பொருளாதார வேலைத்திட்டமே. எதிர்க்கட்சிகள் இழுத்தடிக்கும் போது இந்த வெற்றியை நாட்டுக்கு வழங்கியுள்ளோம். நாட்டின் பொருளாதார நெருக்கடி தீர்க்கப்படும்போது, மக்கள் தங்கள் விருப்பப்படி ஆட்சியாளர்களை நியமிக்க அனுமதிப்பதுதான் ஜனநாயகம். இந்த ஜனநாயகத்தை நாட்டுக்கு வழங்க கட்சி என்ற ரீதியிலும் அரசாங்கம் என்ற ரீதியிலும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

நாட்டு மக்கள் தேசிய தேர்தலைக் கோருகின்றனர். அதன்படி ஜனாதிபதித் தேர்தலுக்கு எமது கட்சியும் அரசாங்கமும் தயாராகவே உள்ளன. இந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு, உழைக்கக் கூடிய ஒரு பொது வேட்பாளரை முன்வைக்கிறோம். அவர் இந்த நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக நிச்சயம் வருவார். ஏனென்றால் நம் நாட்டின் முற்போக்கு முகாம் இன்னும் நம்மிடம் உள்ளது.

ஜே.வி.பி.யின் வரலாற்றில் அதிகூடிய தடவைகள் ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் ஜனாதிபதித் தேர்தல் தவிர்க்கப்பட்டது. அவர்கள் உண்மையில் ஜனாதிபதி தேர்தலுக்கு பயப்படுகிறார்கள். ஜே.வி.பி. என்பது நடைமுறை அறிவு கொண்ட அரசியல் கட்சியல்ல. ஏனெனில் அது மக்கள் முன் பொய்யான விசித்திர உலகத்தை உருவாக்கியுள்ளது.

தற்போது உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ள பிரதிநிதிகளின் காலம் முடிந்து விட்டது. ஆனால், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கிராம மக்களை விட மிக நெருக்கமானவர்கள். பொது சேவை இல்லாமல் இவர்கள் வாழ வழியில்லை. நாட்டில் சட்டங்கள், விதிகள் உள்ளன. அதுதான் உண்மை. ஆனால் அவை பொது மக்கள் சேவைக்கு இடையூறாக இல்லை. எனவே, இந்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களிடம் கிராமத்தில் பொது சேவையை நிறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். வழக்கம் போல் கிராமத்துக்குச் சென்று உங்கள் சேவையை மீண்டும் கிராமத்தில் தொடருங்கள் என்றார்.

## சர்வதேச குற்றவியல்...

இலங்கையில் உள்ள சகல இன மக்களின் ஜனநாயக சமத்துவத்தை உறுதி செய்ய பொதுஜன வாக்கெடுப்பு உள்ளிட்ட, உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக கோட்பாடுகளை இலங்கையில் நடத்த ஊக்குவிக்க வேண்டுமென்றும் அந்தப் பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## பாலியல் குற்றம் புரிந்த...

யுவதியின் பெற்றோருக்கு அறிமுகமான இருவர், ஜீவநகருக்கு வரும் சாமியார் ஒருவரை பற்றி குறிப்பிட்டு, அவரிடம் அனுப்பினால் குணமடைய வைப்பார் என தெரிவித்தனர்.

திருகோணமலையைச் சேர்ந்த 30 வயதான சாமியார் ஒருவர் முத்தையன்கட்டு, ஜீவநகருக்கு அடிக்கடி வந்து, பில்லி சூனியம் விரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

அவரிடம் யுவதியை அழைத்துக் கொண்டு பெற்றோரும் சாமியாரை அறிமுகப்படுத்திய இருவரும் சென்றனர்.

யுவதிக்கு இறைச்சி சாப்பிட்டதால் விஷம் பரவியுள்ளதுடன் வயிற்றில் கல்லும் உருவாகியுள்ளது. அதை 5 நாட்கள் பூஜையின் மூலம் அகற்றலாம் என சாமியார் கூறியுள்ளார். ஆனால், யுவதியை தனியாகவே அனுப்ப வேண்டுமெனக் கூறியுள்ளார்.

போலிச்சாமியாரின் பேச்சை நம்பிய பெற்றோர், யுவதியை தனியாக அவரிடம் அனுப்பியுள்ளனர்.

பூஜை செய்து, சூனியம் விரட்ட வேண்டுமென குறிப்பிட்டு, அறையொன்றுக்கு யுவதியை அழைத்துச் சென்றுள்ளார் சாமியார். அந்த வீட்டு உரிமையாளரான பெண்ணை, வீட்டு வாசல் கதவில் காவலுக்கு நிற்க வைத்துள்ளார்.

யுவதிக்கு கஞ்சா கலந்து தயாரிக்கப்பட்ட ரொட்டியை கொடுத்து உண்ண வைத்ததுடன், கசிப்பும் கொடுத்து பருக வைத்துள்ளார்.

பின்னர் யுவதியின் ஆடைகளை கலைந்து நிர்வாணமாக்கி, சூனியம் விரட்டுவதாக கூறி, பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார்.

அத்துடன், யுவதியை பலவந்தமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்க முயன்ற போதும், யுவதி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். வயிற்றில் உள்ள விஷத்தை உறிஞ்சி, கல்லைக் கரைக்க வைக்கும் சக்தியுள்ளது என குறிப்பிட்டு, யுவதியை பலவந்தமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கியுள்ளார்.

யுவதியின் முறைப்பாட்டைத் தொடர்ந்து திருகோணமலையைச் சேர்ந்த 30 வயதான போலிச்சாமியார், சூனியம் விரட்டும் பூஜைகள் செய்து வந்த ஜீவநகர் பகுதியிலுள்ள வீட்டு உரிமையாளரான பெண், போலிச்சாமியாரிடம் யுவதியின் பெற்றோரை அறிமுகப்படுத்தி வைத்த இருவர் என நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட யுவதி மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியாவில் 1000 ஏக்கரில்...

கருத்தில் கொண்டு, அப்போதைய வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் அனுமதியளிக்க மறுத்து விட்டார்.

அத்துடன், அப்போது வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலும் அனுமதி மறுக்கப்பட்டது.

தற்போது இந்த திட்டம் மீளவும் கையிலெடுக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த திட்டத்தின் பின்னணியில் சீன முதலீடு இருக்கிறது என்ற சந்தேகம் இந்தியத் தரப்புக்கு உள்ளதையும் தமது அதிருப்தியை அரசுக்கு தெரிவித்ததையும் நம்பகரமாக அறியமுடிகின்றது.

இந்த காணி வழங்கல் பற்றிய உயர்மட்ட கூட்டம் கடந்த 18ஆம் திகதி சூம் செயலி ஊடாக இடம்பெற்றது. ஜனாதிபதி, கொழும்பு உயரதிகாரிகள் பலர், வவுனியா மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கூட்டத்தில் காணி வழங்கல் பற்றி ஜனாதிபதி தெளிவான கருத்து எதையும் தெரிவிக்கவில்லை. இந்திய தரப்பின் அதிருப்தியையடுத்து ஜனாதிபதி காணி வழங்கலில் பின்வாங்கியிருக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

வவுனியா வடக்கு பகுதியில் இந்த காணிகளை தமக்கு வழங்குமாறே முதலீட்டாளர்கள் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்ட SUTECX SUGAR INDUSTRY PRIVATE LIMITED என்ற நிறுவனமே இந்த முன்மொழிவை செய்துள்ளது. இந்த நிறுவனத்தின் இயக்குநராக மைக் எஸ்.மொஹம்மட் என்பவர் குறிப்பிடப்பட்டுள்ளார். இந்த நிறுவனத்தின் திட்டங்களுக்கான சிரேஷ்ட பிரதித் தலைவராக சுரேன் குருசாமி குறிப்பிடப்பட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 18ஆம் திகதி நடந்த காணிக்கான கூட்டத்தில் சுரேன் குருசாமியும் கலந்து கொண்டிருந்தார். சுரேன் குருசாமி ரெலோ அமைப்பின் தேசிய அமைப்பாளராகவும் பேச்சாளராகவும் செயற்படுகிறார்.

இந்தத் திட்டத்துக்கான முதலீடு, கிட்டத்தட்ட கொழும்பு, துறைமுக நகரத்தின் முதலீட்டுக்கு இணையானதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம், போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களின் மறுவாழ்வை மேம்படுத்த திட்டமிட்டுள்ளதாக முதலீட்டாளர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் முன்னுரிமையின் அடிப்படையில் காணிகள் வழங்கப்படும் என்றும் அவர்கள் கரும்பை உற்பத்தி செய்து நிறுவனத்துக்கு வழங்க வேண்டும் என்றும் முதலீட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காணி கரும்புச் செய்கைக்கே கோரப்பட்டுள்ளதாகவும் நிறுவனத்துக்கு அல்லவென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் எல்லைக் கிராமத்தில் அமைந்துள்ள இந்த திட்டத்தின் மூலம், வடக்கின் எல்லையை காப்பாற்றலாமென்றும் 1970களில் காந்தியம் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட குடியேற்றத் திட்டத்தை ஒத்ததாக இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக முதலீட்டாளர்கள் தெரிவித்தனர்.

## செப். மாதத்துக்குள்...





இதன் நிர்மாணப் பணிகள் 2018 இல் ஆரம்பிக்கப்பட்டது. நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் மேற்பார்வையின் கீழ் இதன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தினந்தோறும் 21,000 கனமீற்றர் கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையம், 07 சேவை நீர்த்தேக்கங்கள், 37 கிலோமீற்றர் பரிமாற்றக் குழாய் அமைப்பு, 120 கிலோமீற்றர் விநியோக குழாய் அமைப்பு ஆகியன இதன் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் கீழ், 52,300 குடும்பங்களை உள்ளடக்கிய சுமார் 169,000 மக்கள் சுத்தமான குடிநீரைப் பெறுவதோடு, அதன் கீழ் 25,200 புதிய நீர் இணைப்புகள் வழங்கப்படும். இதனைத்தவிர ஏற்கனவே உள்ள 27,100 நீர் இணைப்புகள் மேம்படுத்தப்படவுள்ளன.

பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து, குடிநீர் திட்டத்தை மக்களுக்கு கையளித்த ஜனாதிபதி, நீர் கட்டமைப்பையும் திறந்து வைத்தார். பின்னர் குடிநீர்த் திட்ட வளாகத்தையும் பார்வையிட்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"2018 இல், பிரதமராக இருந்தபோது, இந்த குடிநீர்த் திட்டத்துக்கு அடிக்கல் நாட வந்தேன். இன்று ஜனாதிபதி என்ற ரீதியில் அந்த நீர்த் திட்டத்தை திறந்துவைக்க வருவதை பெரும் பாக்கியமாக கருதுகின்றேன். இந்த திட்டத்தை நிறைவு செய்ய முடிந்ததால் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

முன்னாள் அமைச்சர் கபீர் ஹாஷிமினால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டம் அடுத்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பதவிக் காலத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இன்று ஆரம்பிக்கப்படும் இந்த குடிநீர்த் திட்டத்தால் சுமார் இரண்டு இலட்சம் மக்களின் குடிநீர்த் தேவை பூர்த்தியாகும். இந்த குடிநீர்த் திட்டத்துக்கு உதவிய அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை கடந்த காலங்களில் வங்குரோத்து நாடாக அறிவிக்கப்பட்ட பின்னர் முதலீட்டாளர்கள் எவரும் நாட்டுக்கு வரவில்லை. நாட்டில் இருந்த முதலீட்டாளர்களும் வெளியேறினர். அவ்வாறான சூழலில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு உதவிகளை வழங்குவதில் ஆர்வம் காட்டுவதில்லை. இவ்வாறான சூழ்நிலையில் நான் நாட்டின் பொறுப்பை ஏற்று, சர்வதேச நாணய நிதியத்துக்கு சென்று நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்துள்ளேன்.

ஏனென்றால் சிங்களவராக இருந்தாலும் சரி, தமிழராக இருந்தாலும் சரி, மக்கள் பிச்சைக்காரர்களாக வாழ விரும்புவதில்லை. அவர்கள் பெருமையுடன் கண்ணியமாக வாழவே விரும்புகிறார்கள்.

சர்வதேச நாணய நிதியம் எமக்கு கடினமான நிபந்தனைகளை விதித்திருந்தது. ஆனால் எங்களுக்கு வேறு மாற்று வழிகள் இருக்கவில்லை. இதற்கு முன்னரும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளில் இதே போன்ற நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

அங்கு ஒரு அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்களில் இருந்து விலகியது. ஆனால் நாம் சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்று சரியான முகாமைத்துவத்துடன் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறோம்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்குள், நமது நாட்டின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றியடையச் செய்து, பொருளாதாரத்தை ஒரு குறிப்பிட்ட ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர முடியும். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளோம்.

இன்று பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைக்கு தமது விருப்பத்தை வெளிப்படுத்தி தேவையான ஆதரவை வழங்கியுள்ளனர். இந்த நாடு அடைந்துள்ள பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள வேண்டுமானால் அந்த ஆதரவு மிகவும் முக்கியமானது. வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு கௌரவமாக வாழக்கூடிய நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

### அமைச்சர் ஜீவன் தொண்டமான் உரை

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் உரை நிகழ்த்துகையில்,

இங்கு வந்த அனைவருக்கும் நன்றி. நெதர்லாந்து அரசுக்கும், துருக்கி அரசுக்கும் எனது சிறப்பு நன்றிகள். மேலும், இப்பணிக்கு பங்களித்த நீர் வழங்கல் சபை உட்பட அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் இங்கு தங்கி இத்திட்டத்தை வெற்றிகரமாக முடிக்க உழைத்தமைக்கு நான் நன்றி தெரிவிக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் எண் 6, அனைவருக்கும் சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் வழங்கும் இலக்கை அடைய தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உறுதிப்பாட்டை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்கு முயற்சி எடுத்த பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம் இன்று இந்த நிகழ்வில் கலந்துகொண்டமை மகிழ்ச்சியே. இன்று இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் வெற்றியடையத் தேவையான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தவர் ஜனாதிபதி என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இன்று ஜனாதிபதி இந்த நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவித்துள்ளார். அவர் முன்னின்று நடத்தும் சரியான பொருளாதார வேலைத்திட்டத்தினால் கைவிடப்பட்ட திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்கக்கூடிய நிலையை நாடு எட்டியுள்ளது என்றே கூற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

### இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த

நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உரை நிகழ்த்துகையில்,

தற்போதைய ஜனாதிபதி 2018 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த போது இந்த நீர்த் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார்.

இன்று அவர் இந்த குடிநீர்த் திட்டத்தை திறந்து வைக்க வந்திருப்பது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. கேகாலை மாவட்டம் நீரினால் தன்னிறைவு பெற்றுள்ள போதிலும் மாவட்டத்தில் 45 வீதமான மக்களுக்கு மட்டுமே குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று இந்த நீர்த்திட்டத்தின் மூலம் சுமார் 60 வீத மக்களின் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்படும் என்பதைக் கூற விரும்புகின்றேன்.

திருகோணமலை மாவட்டத்தில் குடிநீர் விநியோகம் 70வீதமாக உயர்ந்துள்ளது. அம்பாறையிலும் அப்படித்தான். போராட்டக்காரர்கள் அரச சொத்துகளை இடித்து சேதப்படுத்தினாலும், இது போன்ற பாரிய திட்டங்களைப் பெற்றுக்கொள்ளவே போராட வேண்டும் என்று நான் நம்புகிறேன் எனவும் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பாராளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹாஷிம், ராஜிகா விக்கிரமசிங்க, சுஜித் சஞ்சய பெரேரா, உதயகாந்த குணதிலக்க, கேகாலை மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைக்கான துருக்கிய தூதுவர் திருமதி டெமெட் சர்காஷ_லி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கண்டி மறைமாவட்ட ஆயரை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கண்டி மறைமாவட்ட ஆயர் கலாநிதி பேரருட்திரு வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகையை நேற்று முன்தினம் (20) சந்தித்தார். கண்டியில் உள்ள ஆயர் இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

வீட்டுப் பிரச்சினை உட்பட பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள போதிலும் அவர்களது வாழ்வாதார மேம்பாட்டுக்கு உத்தரவாதம் வழங்கப்படாமை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. அத்துடன், அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டன.

மத்திய மாகாணத்தில் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து இதன்போது, ஆயர், ஜனாதிபதிக்கு விளக்கமளித்ததுடன், ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவினால் இச்சந்தர்ப்பத்தில் ஆயர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரையும் ஒருங்கிணைத்து சில பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அத்துடன், நுவரெலியா மற்றும் ஏனைய பெருந்தோட்டங்களின் வீதிக் கட்டமைப்பு சேதம் அடைந்துள்ளதால் மக்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்த ஆயர், வீதிக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்துதருமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டார்.

ஆயர் பிரிவின் அருட்தந்தையர் மற்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகம, சனத் நிஷாந்த, மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ. கமகே, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தமிழினப் படுகொலை நினைவேந்தல் ஜேர்மனியில்



தமிழினப் படுகொலையின் நினைவேந்தல் நிகழ்வு ஜேர்மன் "டுசில்டோர்வ்" நகரில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

அரசாங்கம் உலக நாடுகளின் உதவியோடு 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பகுதியில் மேற்கொண்ட தமிழினப் படுகொலையின் 14ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒழுங்கமைப்பில், ஈழத்தமிழர் மக்களவை, தமிழ் இளையோர் அமைப்பு, தமிழ்ப் பெண்கள் அமைப்பு ஆகியன ஒன்றிணைந்து ஜேர்மனில் நான்கு பிரதான பெரு நகரங்களில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நான்கு நகரங்களில் ஒன்றான, ஜேர்மன் மத்திய மாநில ஆளுகைக்குட்பட்ட "டுசில்டோர்வ்" நகரில் பாராளுமன்ற அமைவிடத்துக்கு முன்பாகவுள்ள 'லான்ராக்' நினைவுத் திடலில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

டுசில்டோர்வ் நகர பிரதான பஸ் நிலையத்துக்கு அருகாமையிலிருந்து பி.ப. 2.30 மணியளவில் ஆரம்பமான மக்கள் பேரணி வலிசுமந்த கோஷங்களை எழுப்பியவாறு பி.ப.4.15 மணியளவில் நினைவுத் திடலை சென்றடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாயின.

ஈகைச்சுடரேற்றல், பொதுப்படங்களுக்கான மலர்மாலை அணிவித்தல், அகவணக்கம் என்பன இடம்பெற்றன.

அவற்றைத் தொடர்ந்து கவி வணக்கம், இசை வணக்கம், வலியுணர்த்தும் நடனம், தமிழ் மற்றும் வாழ்விட மொழியிலான உரைகள் என்பன இடம்பெற்றதுடன் தமிழ் இளையோர் அமைப்பின் உறுதியுரையும் இடம்பெற்று "நம்புங்கள் தமிழீழம்" எனும் கோஷப் பாடலுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்று, இறுதியில் முள்ளிவாய்க்கால் நினைவுடனான உப்புக்கஞ்சியும் வழங்கப்பட்டது.

புலம்பெயர் தாயக மக்கள், குர்திஸ்தான் மக்கள் பிரதிநிதிகள், இடதுசாரிக் கட்சி உறுப்பினர், அருட்தந்தையரென பெருமளவானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை தொடர்பான புகைப்பட காட்சிப்படுத்தல்கள், வாழ்விட மொழியிலான துண்டுப் பிரசுரங்கள் வழங்கல் என்பன தமிழ் இளையோரால் இதன்போது முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் வைகாசி மாதம் 08ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்:** எடுத்த காரியம் தாமதமானாலும் காரியத்தை சாதிப்பீர்கள். வீண் மனக் குழப்பங்களைத் தவிர்த்திடுங்கள்.

**ரிஷபம்:** மனோ தைரியத்தைக் கொண்டு அனைத்தையும் சாதிப்பீர்கள். மனது மகிழ்ச்சியாக இருக்கும்.

**மிதுனம்:** பணம் இருக்கிறதே என்ற எண்ணத்தில் செலவு செய்து பின் நஷ்டப்படுவீர்கள், தூரப் பயணங்கள் வேண்டாம்.

**கடகம்:** மூத்த உறுப்பினர்கள் உங்களுக்காக உதவ முன்வருவர். பெண்கள் மூலமான தன வரவுகள் உண்டு.

**சிம்மம்:** தொழில் வகையில் புகழ், கௌரவம் மேலோங்கும். நினைத்ததை வெற்றியுடன் சாதிப்பீர்கள்.

**கன்னி:** திடீர் பிரயாணங்களால் உடல் அசதி ஏற்படும். உங்களுக்கு வேண்டியவர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**துலாம்:** திட்டமிட்ட காரியங்கள் சற்று தாமதமாகி நடைபெறும். வீணே மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

**விருச்சிகம்:** தேவையற்ற பயணங்களால் செலவுகள் ஏற்படும். கோபத்தை கொஞ்சம் அடக்கி வைத்துக் கொள்வது நல்லது.

**தனுசு:** பெண்களால் பாராட்டப்படுவீர்கள். கூட்டு வியாபாரத்தில் நீங்கள் எண்ணிய இலாபத்தினை அடைவீர்கள்.

**மகரம்:** வெளியிடப்பயணங்களால் அதிக இலாபங்களை அடைவீர்கள். கேட்ட கடன் கிடைக்கப்போகிறது.

**கும்பம்:** போட்டிப் பந்தயங்களில் வெற்றி உண்டு. பயணங்களில் தடை ஏற்பட்டு பின்னர் நிறைவேறும்.

**மீனம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான காரியங்கள் நடைபெறும். தாய்வழி உதவிகள் அமையும்.

**திதி** : திருதியை பி.ப.11.19 வரை பின் சதுர்த்தி (வளர்)
**நட்சத்திரம்** : மிருகசீரிடம் மு.ப.10.37 வரை பின் திருவாதிரை
**யோகம்** : சித்த யோகம் மு.ப.10.37 வரை பின் மரண யோகம்
**வார சூலம்** : கிழக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்** : பி.ப. 11.50– 12.20 மணிவரை
**ராகுகாலம்** : 7.20– 8.50 மணிவரை
**எமகண்டம்** : 10.20– 11.50 மணிவரை
**குளிகை** : 1.20– 2.50 மணிவரை
**சந்திராஷ்டமம்** : விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிர்ஷ்டம்** : ரோஹிணி, அத்தம், திருவோணம் (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்** : ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739



**இயற்கை எய்திய பிரபல ஜனரஞ்சக இலங்கைப் பாடகர் கிறிஸ்டோபர் போலின் பூதவுடலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று இறுதி அஞ்சலி செலுத்தினார்.**

# மாணவர் ஒன்றியத்துக்கு புதிய அழைப்பாளர் தெரிவு



அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய அழைப்பாளராக பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மதுஷான் சந்திரஜித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் (20) நடைபெற்ற மாணவர் ஒன்றிய அமர்வின் போது புதிய அழைப்பாளர் தெரிவு செய்யப்பட்டதாக அமைப்பின் முன்னாள் அழைப்பாளர் வசந்த முதலிகே விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மதுஷான் சந்திரஜித் பேராதனை பல்கலைக்கழக இணைந்த சுகாதார பீடத்தைச் சேர்ந்தவர் என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெங்கு ஒழிப்புக்கு இராணுவம் உதவி

டெங்கு வளாக பரிசோதனை உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக டெங்கு கட்டுப்பாட்டு செயலணிக்கு இராணுவம் தமது ஆதரவை வழங்கி வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அறநெறி பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களைச் சூழவுள்ள பகுதிகளில் சோதனை செய்தல் உள்ளிட்ட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நேற்று (21) முதல் ஆரம்பிக்கப்படுவதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்திலுள்ள அறநெறி பாடசாலைகளை மையமாகக் கொண்டு சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் சமூக வைத்திய நிபுணர் லஹிரு கொடிதுவக்கு தெரிவித்தார்.

இதேவேளை, சோதனைகளை மேற்கொள்வதற்கு கடினமாக உள்ள பிரதேசங்களை ஆளில்லா விமானங்களை பயன்படுத்தி சோதனையிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு கூறியுள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களுக்கு இணையாக வடமேல் மாகாணத்திலும் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் இன்று (22) ஆரம்பிக்கப்படவுள்ளது.

# பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மாணவன் கம்பளை வைத்தியசாலையில் அனுமதி



**(கலஹா செய்தியாளர்)**

கம்பளை, பன்விலதென்ன பிரதேச வீடொன்றில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 18 வயது பாடசாலை மாணவன் ஒருவன் காயமடைந்த நிலையில் கம்பளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று (21) அதிகாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தில் (ரொட்வயலர் ரக) நாய் ஒன்று உயிரிழந்துள்ளதுடன் நாயின் தாக்குதலில் காயமடைந்த உதவி பொலிஸ் பரிசோதகர் லக்மால் மற்றும் பொலிஸ் பரிசோதகர் ஏக்கநாயக்க ஆகிய இருவரும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட வீட்டில் சட்டவிரோத மதுபானம் உற்பத்தி செய்யப்படுவதாக கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து கம்பளை பிராந்தியத்துக்குப் பொறுப்பான பதில் பொலிஸ் அதிகாரி ரொசான் அமரசிங்ஹவின் கீழ் இயங்கும் பிராந்திய குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு அதிகாரிகள் குழுவொன்று நேற்று (21) அதிகாலை குறித்த வீட்டை சோதனையிடச் சென்ற சந்தர்ப்பத்திலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து வீட்டு உரிமையாளர் குறிப்பிடுகையில், அதிகாலை 5.30 மணிக்கு நாங்கள் நாயை கூட்டிலிருந்து வெளியில் திறந்துவிடுவது வழக்கமாகும். இன்றும்(நேற்றும்) அப்படி திறந்துவிட்டோம். அச்சந்தர்ப்பத்தில் ஐந்து ஆறுபேர் ஆயுதங்களுடன் வீட்டின் பின்வழியாக உட்புகுந்தார்கள். அப்பொழுது நாய் அவர்களை கடிக்க பாய்ந்தது.

மேலும் அந்த இடத்தில் பாடசாலை மாணவனான எனது மகனும் மைத்துனரும் இருந்தனர். அப்பொழுது பொலிஸார் மகனையும் நாயையும் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்கள். அதில் நாய் இறந்துவிட்டது. மகன் காயமடைந்தார்.

பின்னர் மகனை பொலிஸார் கைவிலங்கிட்டு களஞ்சிய சாலைக்குள் கூட்டி கொண்டு போய் 45 நிமிடம் வரை விசாரணை மேற்கொண்டு விட்டு வைத்தியசாலையில் கூட அனுமதிக்காமல் சென்றுவிட்டனர். பின்னர் நாங்கள் மகனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றோம் என்றார். மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் புபுரஸ்ஸ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மனோரஞ்சன தலைமையில் விசேட பொலிஸ் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

# கோட்டா பதவி நீக்கிய ஆளுநரை ஜனாதிபதி ரணில் நியமித்தது ஏன்?

## ஐக்கிய மக்கள் சபையின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வன்னியசிங்கம் பிரபாகரன் கேள்வி

ஜனநாயகத் தேர்தலை நிறுத்துவதற்கு ஒத்தாசை புரிந்த பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வட மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமை ஜனநாயகத்தை கேள்விக்குட்படுத்தும் செயல் என ஐக்கிய மக்கள் சபையின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வன்னியசிங்கம் பிரபாகரன் தெரிவித்தார்.

யாழ். வட மாகாண ஆளுநர் தலைமை அலுவலகத்துக்கு முன்னால் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இலஞ்ச ஊழலுக்கு எதிரான அமைப்பு நடத்திய கவனயீர்ப்புப் போராட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நடைபெற இருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நிறுத்துவதற்காக சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பதவியில் இருந்து இராஜினாமா செய்தவர் தற்போதைய வடமாகாண ஆளுநர் சார்ள்ஸ்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ இவரை வட மாகாண ஆளுநராக நியமித்த நிலையில் தனது ஜனாதிபதி பதவிக்காலம் முடியும் முன்னரே அவரது பதவியை பறித்தார். அவரது பதவியை பறித்ததற்கு அவர் மீது இருந்த பல்வேறு முறைகேடுகள் காரணமாக அமைந்தன.

ஆகவே ஊழல் முறைகேடுகளுடன் தொடர்பு இல்லாத மக்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய தகுதியான ஆளுநர் ஒருவரை ஜனாதிபதி நியமிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



**கலீபதுல் குலபா, ரயீஸுல் முகத்தமீன், முகத்தமீன்களுக்கான நியமனக் கடிதங்கள் கையளிக்கும் நிகழ்வு 14ஆம் திகதி கொழும்பு உம்மு ஸாவியாவில் நிர்வாக சபைத் தலைவர் தேசபந்து மக்கி ஹாஷிம் தலைமையில் இடம்பெற்றது. சீனன்கோட்டை பகுதிக்கான ரயீஸுல் முகத்தமீன்கள் மற்றும் முகத்தமீன்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. (படங்கள்: பேருவளை செய்தியாளர்)**


# வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மே 22ஆம் திகதி, திங்கட்கிழமை**

# தமிழருக்குத் துயரம் தந்த மே!

இலங்கை டொமீனியன் அந்தஸ்தில் இருந்து முற்றாக நீங்கி இறைமையுள்ள சுதந்திர அரசாக மாறி இன்றுடன் 51 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

157 வருடங்கள் பிரித்தானியாவின் ஆட்சியின் கீழ் இருந்த தொடர்புகளை முடிவுக்குக் கொண்டுவந்து 1972ஆம் ஆண்டு மேமாதம் 22ஆம் திகதி பிற்பகல் 12.43 மணிக்கு இலங்கை குடியரசாக அறிவிக்கப்பட்டது. அன்றைய தினம் பிற்பகல் 12.46 மணிக்கு இலங்கை குடியரசின் முதலாவது பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்க சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இதனைத் தொடர்ந்து வில்லியம் கொப்பல்லவ இலங்கையின் முதலாவது ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நாட்டின் பாராளுமன்றமாக அன்று கருதப்பட்ட தேசிய அரச பேரவையின் சபாநாயகராக ஸ்டான்லி திலகரத்ன, ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். குடியரசு யாப்பை கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா வரைந்தார். குடியரசு யாப்பைத் தொடர்ந்து 'சிலோன்' என்று அழைக்கப்பட்டு வந்த இந்நாடு அன்று முதல் 'ஸ்ரீலங்கா' என்று அழைக்கப்பட்டது. 1972ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி அரசின் இலச்சினையும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை வடிவமைத்த பெருமை எஸ்.எம்.செனவிரத்னவை சாரும்.

குடியரசான ஸ்ரீலங்காவில் சிறுபான்மையினருக்கெதிரான அடக்குமுறைகளும் சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைவர்களால் தூண்டப்பட்ட இன உணர்ச்சியும் 1970களில் வட பகுதியில் தமிழ்ப் போராட்ட இயக்கங்களின் வளர்ச்சிக்கு வழிகோலின. நாட்டின் பின்தங்கிய பிரதேசத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழகக் கல்வியை வழங்கும் முகமாக சிறிமாவோ அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறையினால், பல்கலைக்கழகங்களில் திறமைவாய்ந்த தமிழ் மாணவர்களுக்கான வாய்ப்பு பறிக்கப்பட்டது. இது தமிழ் ஆயுதப் போராட்டத்துக்கு உடனடிக் காரணியாக அமைந்தது. அன்றிலிருந்து இற்றைவரை தமிழர்களுக்கு எதிலும் சம உரிமை, சமவாய்ப்பு வழங்கப்படவேயில்லை.

இலங்கையில் தமிழர்களை பொறுத்தவரை மே 22 என்பதுவும் முக்கியமான தினமாகும். சிறுபான்மையாக வாழும் தமிழருக்கு எதிராக நாடு 1948 இல் விடுதலை பெற்ற பின்னர் , முதலாவது நாடு தழுவிய வன்முறையும் இனக்கலவரமும் இதேபோன்ற தினமொன்றில்தான் இடம்பெற்றது.

இவ்வன்முறைகள் 1958 மே 22 முதல் மே 27 வரை இடம்பெற்றன. ஆனாலும், 1958 ஜூன் 1இல் அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்ட பின்னரும் ஆங்காங்கே வன்முறைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வு பொதுவாக இனக்கலவரம் என அழைக்கப்பட்டாலும், சில இடங்களில் இன அழிப்பாகவே நடத்தப்பட்டது. இதன்போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை, கண்டெடுக்கப்பட்ட உடல்களின் எண்ணிக்கையைக் கொண்டு மதிப்பிடப்பட்டு, 70 முதல் 300 வரையென அறிவிக்கப்பட்டது. இக்கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலானோர் தமிழர்கள் ஆயினும், தமிழர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்த காரணத்தினால் சில சிங்களவர்களின் சொத்துகளும் சேதமாக்கப்பட்டன. அத்துடன், தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் சிங்களவர்கள் சிலர் தமிழர்களால் தாக்கப்பட்டனர்.

1956ஆம் ஆண்டில் சொலமன் பண்டாரநாயக்கா பெரும்பான்மை சிங்களமயமாக்கம் என்ற கொள்கையின் அடிப்படையில் இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றினார். புதிய அரசு சிங்கள மொழியை நாட்டின் ஒரே ஆட்சிமொழியாக அறிவித்து தனிச் சிங்களச் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றியது. இலங்கையின் கால்வாசிக்கும் அதிகமானோர் தமிழ் பேசுபவர்களாக இருந்தனர். இச்சட்டம் தமிழர்களிடையே எதிர்ப்பைத் தூண்டிவிட்டது. தமது மொழி, கலாசாரம், பொருளாதார நிலை என்பன இதனால் பாதிக்கப்படும் என அவர்கள் அஞ்சினர்.

தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைத் தமிழரசுக் கட்சி அரசியல்வாதிகள் அறப்போராட்டத்தை ஆரம்பித்தனர். இதனால் இனங்களுக்கிடையே முறுகல் நிலை அதிகரித்தது. இலங்கையின் கிழக்கே கல்லோயா நகரில் 150 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதனையடுத்து பிரதமர் பண்டாரநாயக்கா, தமிழரசுக் கட்சியைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். இதன் மூலம் 1957ஆம் ஆண்டில் பிரதமருக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்திற்கும் இடையில் பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதன் மூலம் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழும் நிர்வாக மொழியாக இருக்க உடன்பாடு எட்டப்பட்டது.

ஆனாலும், சிங்களத் தேசியவாதிகள் மற்றும் பௌத்த துறவிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். குறிப்பாக முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையில் கண்டிக்கு நடைப் பயணம் மேற்கொண்டனர். இவ்வெதிர்ப்பை அடுத்து, பண்டாரநாயக்கா அரசு பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தது. அதுதான் வரலாறு.

மே 22 இல் தமிழர்களை அழித்த 1958 கலவரம் இடம்பெற்ற அதேபோன்ற தினத்தில்தான் குடியரசாகவும் மாறியது இலங்கை. குடியரசு என்பதற்கு நேரடிப் பொருள் குடிமக்களின் அரசு. அதாவது மக்களாட்சி. மக்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப தேர்தல் மூலம் தங்களுடைய தலைவனைத் தேர்ந்தெடுத்து அவர்கள் ஆட்சி நடத்தும் நாடுதான் குடியரசு நாடு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எப்படி ஆட்சி செய்ய வேண்டும் என்பதை நிர்ணயிப்பதுதான் அரசியலமைப்புச் சட்டம். சரியான ஆட்சி இல்லையெனில் தேர்ந்தெடுத்தவரை நீக்கிவிட்டு வேறொரு நல்ல தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இலங்கையைப் பொறுத்தவரை ஆட்சியாளர்கள் தெரிவுக்கு மட்டுமே தமிழர்கள், முஸ்லிம்கள் தேவைப்படுகிறார்கள். அதன் பின்னர் அந்த தமிழ் பேசும் சமூகங்களை எவரும் கணக்கில்கூட எடுப்பதில்லை.

மே மாதமே தமிழர்களுக்கு முக்கியமானதுதான். 1958, 1972, 2009 என்று பெரும் வலியை தமிழர்கள் உணர்ந்த மாதமிது. அந்த துயரங்கள் என்றும் அழிந்துவிடப்போவதில்லை.

# போரின் முடிவுக்குப் பிறகு கடந்துவிட்ட 14 வருடங்களில் நிறைவுறாத பணிகள்

சுமார் மூன்று தசாப்த காலமாக நீடித்த போர் முடிவடைந்து, அதன் 14ஆவது வருடாந்த நிறைவை (மே 18) நாடு நினைவுகூர்ந்து கொண்டிருக்கிறது. இரத்தக்களரியில் முடிவடைந்த போர், மக்களின் வாழ்வில் தொடர்ந்தும் அதன் தாக்கத்தை செலுத்திக் கொண்டிருக்கிறது.

ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மாண்டுபோன தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செய்துகொண்டிருக்கின்ற அதேவேளை, மேலும், ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காணாமற்போன தங்கள் அன்புக்குரியவர்கள் விரைவில் திரும்பிவருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வழமைபோன்று அரசாங்கம் போர் வெற்றியைக் குறிக்குமுகமாக மே 19 நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது. இது நாட்டின் பெரும்பான்மையினரின் உணர்வுகளை பிரதிபலிப்பதாக அமைந்தது.

போர் முடிந்துவிட்ட போதிலும், அதற்கு வழிவகுத்த பிரச்சினைகளும் அவற்றில் இருந்து தோன்றுகின்ற புதிய பிரச்சினைகளும் தொடர்ந்தும் தொல்லையைக் கொடுத்துக் கொண்டிருப்பதுடன், நாடு அதற்கு இருக்கின்ற ஆற்றல்களை பயன்படுத்தி முன்னேறுவதற்கு குந்தகமாக அமைகின்றன. நாடு தொடர்ந்தும் பிளவுபட்ட ஒரு குடும்பத்தைப் போன்றே காணப்படுகிறது. பிளவுகளை குணப்படுத்தாதவரை நாடு வெற்றிபெற முடியாது. பிளவுகளைக் குணப்படுத்துவதற்கு உண்மையான இணக்கப்போக்குடைய இலங்கையை உருவாக்கும் நோக்குடைய ஓர் அரசியல் ஞானிக்குரிய பண்புகளைக் கொண்ட தலைமைத்துவம் தேவை.

காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினையைக் கையாள்வது நிறைவுசெய்யப்படாத மிகவும் அவசரமான பணியாக இருக்கிறது. மக்களின் உணர்வுகளை திருப்திப்படுத்தக்கூடிய முறையில் இந்த பிரச்சினைக்கு தீர்வுகாணப்படவேண்டும். தங்களது கவலை குறித்து அரசு அக்கறை செலுத்தி நீதி கிடைக்கச் செய்யவேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அரசியலமைப்பின் பிரகாரம் அதிகாரப்பரவலாக்கத்துக்கான மாகாண சபைகள் முறைமை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வது இரண்டாவது முக்கியமான பணியாகும். மாகாணசபைகளுக்கு போதுமான நிதி வளங்கள் கிடைக்கச் செய்யப்படவேண்டும். மக்களின் பிரதிநிதித்துவத்துக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை உறுதிசெய்யுமுகமாக மக்களால் தெரிவுசெய்யப்படும் மாகாணசபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் ஒப்படைக்கப்படக்கூடியதாக ஆளுநர்களின் அதிகாரங்களை குறைப்பதற்கு மாகாணசபைகள் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதும் அவசியமாகும்.

நிறைவுசெய்யப்படாத வேறு பணிகளும் இருக்கின்றன. ஆனால், மேற்கூறப்பட்ட இரு பணிகளையும் கையாள்வதற்கு உண்மையான அக்கறை இருக்குமானால் மற்றையவை தன்பாட்டில் தொடரமுடியும்.

நாட்டில் தேசிய நல்லிணக்கத்தைத் தோற்றுவிப்பதற்காகவும் சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படக்கூடிய அச்சுறுத்தல் அதிகரிப்பதைத் தடுக்கவும் இந்த பணிகளை அவசரமாக முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. சர்வதேச தடைகள் போர்க்குற்றங்களைச் செய்ததாக குற்றஞ்சாட்டப்படுபவர்கள் மீதான பயணத்தடைகளின் வடிவில் ஏற்கெனவே பிரச்சினையை கொடுக்கத் தொடங்கிவிட்டன. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் பொருளாதாரச் சலுகையை பாதுகாக்கவேண்டிய தேவை இருக்கிறது.

தமிழ் அரசியல் கட்சிகளுடன் நேரடியாக பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்திருப்பதை தேசிய சமாதானப் பேரவை வரவேற்கிறது. இந்த பேச்சுவார்த்தைகள் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் நேர்மறையான வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கி பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி விரிவுபடுத்தவிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இவை தொடர்பில் தனது நோக்கங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் இந்த விவகாரத்தில் எதிரணி அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை அவர் ஆரம்பிக்கவேண்டும் என்றும் நாம் வேண்டுகோள் விடுக்கிறோம். அவ்வாறு செய்தால்தான் காணப்படக்கூடிய இணக்கப்பாடுகள் சகல தரப்புகளையும் அரவணைப்பதாகவும் நாட்டின சகல இன, மத சமூகங்களின் உச்சபட்ச ஆதரவைப் பெறக்கூடியதாகவும் இருக்கும்.

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

# யோகா அக்காவின் மறைவு...



ஈழத்துப் பெண் எழுத்தாளர்களில் பெண்ணியம் பற்றிய பேச்சு வருகின்றபோது என் மனக்கண் முன் முதலில் வருபவர் யோகா பாலச்சந்திரன்.

சிரித்திரன் சிவஞானசுந்தரம், ஒருமுறை தமது சஞ்சிகையில் ''எழுதும் எழுத்தாளர்கள் எல்லோரும் எழுதுவதைப் போன்று அவர் தம் வாழ்க்கையில் இல்லை'' என்று சொன்னதுண்டு.

யோகா எழுதியபடியும் பேசியபடியும் வாழ்ந்த ஒருவர். அதனாலேயே அவ்வாறு என் முதல் வசனத்தில் குறிப்பிட்டேன்.

அதைவிட, இலங்கையின் மூத்த தமிழ்ப் பெண் பத்திரிகையாளர்களில் ஒருவர் அவர்.

கணவர் பாலச்சந்திரன் பலதரப்பட்ட கலைஞர்களையும் அரங்கேற்றி அழகு பார்த்து மகிழ்வூட்டி மகிழ்ந்தவர். கலைப்பணியிலும் சமூகப்பணியிலும் இருவரும் மனமொத்த தம்பதியாக வாழ்ந்தவர்கள்.

டவர் மண்டபத்தை தமிழ்க் கலைஞர்களுக்காக நன்கு பயன்படுத்திய ஒருவர் பாலா என்பர்.

யோகா பாலச்சந்திரன் பற்றி சில நாட்களுக்கு முன்னர் நானும் பி.விக்னேஸ்வரனும் பேசினோம்.

கதைத்துச் சில நாட்களில் இந்தத் துயரச் செய்தி இன்று அன்னலட்சுமி இராசதுரை ஊடாக வந்திருந்தது.

அன்னலட்சுமி, அந்தனி ஜீவா போன்ற பல எழுத்தாளர்களின் நூல்களை கலைச்சங்கம் மூலம் அக்காலத்தில் பெரிய ஹோட்டல்களில் வெளியிட்டவர் பாலச்சந்திரன் என அறிந்துள்ளேன்.

நான் எனது பாடசாலை நாட்களில் யோகா அக்கா ஊருக்கு வருகின்றபோது அவரைக் காண்பதுண்டு.

எங்கள் வீடு கொடிகாமம் - நெல்லியடி வீதியில் அமைந்ததால் துன்னாலை, கரவெட்டி கிழக்கு என அப்பகுதிகளுக்கு வரும் முக்கிய பிரமுகர்கள் எல்லோருமே எங்கள் வீட்டைத் தாண்டித்தான் நெல்லியடிக்குப் போகவேண்டும்.

'வீரகேசரி'யில் பணியாற்றிய யோகா, ஸ்ரனி (அன்ரன் பாலசிங்கம்), நடராஜா, ஜெயராஜ், மயில் தவராஜா, தனபாலசிங்கம் எல்லோருமே பயன்படுத்திய தெரு அது. சைக்கிள் அல்லது நடைதான் அவர்களின் அன்றைய காலப் போக்குவரத்து.

அந்தத் தெருவால் போகும்போது யோகா எங்கள் வீட்டை அடுத்துள்ள கன்னியர் மட 'சிஸ்டர்மாருடன்' நின்று ஆங்கிலத்தில் கதைத்துப் போவது வழக்கம்.

''இவ தான் ரேடியோவில் குடும்பத்திட்டச் சங்க நிகழ்ச்சி செய்கிறவ'' என்று அப்போது சொல்லக் கேட்டுள்ளேன்.

வானொலியில் பல நிகழ்ச்சிகளை குறிப்பாக பெண்களுக்கான நிகழ்ச்சிகளில் சில அம்சங்களை அப்போது வழங்கியவர்.

இவரது மருமகன் ஒருவரும் எனது சக வகுப்பு நண்பன் என்பதால், இவர் பற்றிய தகவல்கள் மாணவப் பருவத்திலேயே அறியக் கிடைத்தது.

'சருங்கல' திரைப்படம் கரவெட்டி நுணுவில் பிள்ளையார் கோயிலிலும் கேணியிலும் வளவிலும் ஒளிப்பதிவு செய்யப்பட்ட போது நாங்கள் டியூசன் வகுப்புகளையும் 'கட்' பண்ணி திரும்பத் திரும்பக் 'கட் கட்' என்று பலமுறை எடுத்த அந்த சூட்டிங்கை 'அலுப்புத்தட்டாமல்' பார்த்த நாட்கள் யோகா அக்காவின் நினைவுகளின்போது என்றும் வரும்.



காமினி பொன்சேகா, பரீனாலை, வீணா ஜயக்கொடி என அதன் குழுவினர் தமது கரவெட்டி சூட்டிங் நாட்களில் யோகா அக்காவின் வீட்டில்தான் தங்கி நின்று உணவருந்தி மேக்கப் செய்வதை நாம் கண்டோம்.

'சூட்டிங்கின்' போது இவர் அவர்களுக்கு வசனம் சொல்லிக் கொடுப்பார். எனக்கு அப்போது அது புதிய அனுபவம் தானே!

யோகாதான் அதன் தமிழ் உரையாடல்களை எழுதியிருந்தார் என அப்போது அவரது மருமகன் சொன்னார்.

அந்தப் படம் அவரது ஊரான கரவெட்டியில் (நெல்லியடியில்) திரையிடப்பட பல மாதங்கள் எடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

'யோகா பாலச்சந்திரன்' என அக்காலத்தில் வீரகேசரி வார இதழில் மொறாயஸின் எழுத்தமைப்பிலும் ஓவியத்துடனும் அக்காலத்தில் சிறுகதைகள் வருவது வழக்கம்.

சமூக, சாதி, இன, மொழிப் பிரச்சினைகளை மட்டும் அன்றி அப்போதே அலுவலகங்களில் பெண்கள் படும் இடர்கள் பற்றிக் கதைகள் எழுதிய அவர் விமர்சனம், கட்டுரைகள் எனவும் பலவற்றை எழுதியுள்ளார். பல அரச திணைக்கள மொழிபெயர்ப்பு வேலைகளையும் செய்துள்ளார்.

ரூபவாஹினியில் பணியாற்றியவேளை, எமக்கு 1988இல் 'பால் நிலை சமத்துவம்' (Gender Equity through Media) என்ற பயிற்சி இலங்கை மன்றக் கல்லூரியில் ஜெர்மன் ஈபேட் நிறுவன அனுசரணையில் நடந்தபோது அதன் பயிற்சி இணைப்பாளராக இவரே பணியாற்றினார். நீர்கொழும்புக்கு அருகாமையில் வதிவிடப் பயிற்சியும் இடம்பெற்றதாக நினைவு.

இலங்கையிலேயே முதலில் பால்சமத்துவ விடயத்தில் நடந்த பயிற்சிச் செயலமர்வு அது.

அதில் கலந்துகொண்ட சுனிலா அபேசேகர "உங்களுக்கு பயிற்சியாளர்களைவிட, நல்ல ஒருவர் இணைப்பாளராகவே கிடைத்துள்ளார். அவர் மட்டும் உங்களுக்குப் போதுமே.." என்று குறிப்பிட்டார்.

கொழும்பு - வெள்ளவத்தையில் நான் தங்கியிருந்தபோது இடையிடையே அவர் வீட்டுக்குப் போவதுண்டு. முதன்முதல் எனக்கு தனது கையொப்பமிட்டு மாவீரர் செண்பகராமன் என்ற தனது நூலைத் தந்தார். சுபாஷ் சந்திரபோஸுக்கு முதலே இந்திய விடுதலைக்காகப் போராடியவர். "கொண்டு போய்ப் படியும். இவரைப்பற்றி நீங்கள் அறியவேண்டும்'' என்று சொல்லித் தந்த நினைவு.

அறுபதுகளில் அப்படி ஒருவரின் விபரங்களைத் தேடி அவர் எழுதியுள்ளமை ஆச்சரியத்துக்குரியதே...

செண்பகராமன் இந்திய மக்களுக்காக மட்டுமன்றி, ஆபிரிக்க, அமெரிக்க ஆதிக்குடி மக்களுக்காகவும் போராடிய ஒருவராவார்.

ரூபவாஹினியில் யோகா அக்கா, எஸ்.விஸ்வநாதன் தயாரித்த 'காதம்பரி' என்ற மாதாந்த சஞ்சிகை நிகழ்ச்சியில் பங்குபற்ற வருவார்.

பின்னர் 'ஊர்கோலம்' என்ற மாதாந்த சஞ்சிகை நிகழ்ச்சியில் தொகுப்பாளராகப் பங்காற்றினார். அப்போது கே.இராமச்சந்திரன் அதன் தயாரிப்பாளர்.

கே.எஸ்.சிவகுமாரனுக்கு முன்னர் தமிழ்க் கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் ஆங்கில வாசகர்களுக்கு 'டைம்ஸ்' நாளிதழ் மூலம் அறிமுகம் செய்தவர் 'டைம்ஸ் பாலா' (அமரர் பாலச்சந்திரன்) என சில்லையூர் செல்வராசன் ஒருமுறை சொன்னார்.

யோகாவையும் பாலாவையும் இணைத்த 'பெருமை' சில்லையூராருக்கும் மூத்த பத்திரிகை ஆசிரியர் டேவிட் ராஜுவுக்கும் உரியது.

ஆரம்பத்தில் ஆங்கில நாடகம் ஒன்றை இயக்கிய பாலா பின்னர் தொடர்ந்து பல ஆங்கில நாடகங்களை இயக்கினார். அவற்றை யோகாவே எழுதினார்.

அவற்றில் யோகாவும் நடித்துள்ளார். துணை இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

இலங்கைக் கலைஞர் சங்கம் மூலம் பல தமிழ் நாடகங்களை டவர் மண்டபத்தில் மேடையேற்றியவர் பாலச்சந்திரன்.

தொலைக்காட்சி என்ற ஊடகம் வருவதற்குப் பல தசாப்தங்களுக்கு முன்னர், ஸ்ரீசங்கர், கலைச்செல்வன் ஜோபு நசீர், விசாலாட்சி, ராஜேஸ்வரன், ஹெலன்குமாரி போன்ற பல கலைஞர்களை நாடகங்களூடாக டவர் மண்டபத்தில் அரங்கேற்றியவர் பாலச்சந்திரன்.

அவரைப் பற்றி தனியாக எழுதுவதே பொருத்தமானது. யோகா அக்காவின் நினைவுகளின்போது அவரும் என்றும் இணைந்திருப்பார். அப்படியான கலைத் தம்பதியர் அவர்கள்.

யோகா பாலச்சந்திரனின் பிரிவில் துயருறும் அவரது பிள்ளைகள் ஜெகன், சுதன் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

**- நியூஸிலாந்திலிருந்து வரதராஜன் -**




# இன்றைய நாளில்...

- 1809 – வியென்னாவுக்கு அருகில் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகள் முதற்தடவையாக தோற்கடிக்கப்பட்டன.
- 1816 – இங்கிலாந்து, லிட்டில்போர்ட் என்ற இடத்தில், அதிக வேலையின்மை மற்றும் தானிய விலை ஏற்றம் ஆகியவற்றுக்கு எதிராகக் கிளர்ச்சி இடம்பெற்றது.
- 1834 – இலங்கை சட்டவாக்கப் பேரவையின் முதலாவது கூட்டம் கொழும்பில் ஆரம்பமானது.
- 1900 – அசோசியேட்டட் பிரஸ் நிறுவனம் நியூயோர்க்கில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1906 – ரைட் சகோதரர்கள் தமது பறக்கும் கருவிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.
- 1927 – சீனாவில் சினிங் அருகே 8.3 நிலநடுக்கம் ஏற்பட்டதில் 200,000 பேர் வரை உயிரிழந்தனர்.
- 1943 – ஜோசப் ஸ்டாலின் பொதுவுடைமை அனைத்துலக இயக்கத்தைக் கலைத்தார்.
- 1958 – இலங்கை இனக்கலவரம் - 1958: இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களில் 300 இலங்கைத் தமிழர்கள் காடையர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1972 – இலங்கையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்து குடியரசு ஆகியது. சிலோன், ஸ்ரீலங்கா எனப் பெயர் மாற்றம் பெற்று, பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் பெற்றது.

# அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் கூட்டமைப்பு எம்.பிக்கள் பங்கேற்பதில்லை

## பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் குற்றச்சாட்டு

மாவட்ட மற்றும் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வருவதில்லை என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் (20) இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்ட மற்றும் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் வருவதில்லை. ஆனால், தனிநபர்களின் பிரச்சினைக்கு உடனடியாக விரைந்து வருகிறார்கள். மன்னாரில் சில மதகுருமாருடன் இணைந்து சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மண் அகழ்வதற்கான அனுமதியைப் பெற்றுக்கொடுத்துள்ளார்கள்.

இதைவிட, மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் உள்ளன. இதேபோல், அந்தப் பிரச்சினைகளையும் பேசி மக்களுக்கான தீர்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

சில நாட்களுக்கு முன் ஜனாதிபதி தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் அபிவிருத்தி சார்ந்த எந்தக் கருத்துகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைக்கவில்லை. மாறாக தொல்பொருள் சம்பந்தப்பட்ட பிரச்சினைதான் பேசப்பட்டது.

மக்களின் வாழ்வாதாரம், வயற்காணிகளை விடுவித்தல், தொழில் துறைகளை ஏற்படுத்துதல் தொடர்பில் அங்கு பேசவில்லை. எங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பத்தில் காணிவிடுவிப்பு, காணி ஆவணங்களைப் பெற்றுக் கொடுத்தல், நில அளவை பிரச்சினைக்குத் தீர்வு காணல் தொடர்பில் பேசி முன்னேற்றம் கண்டுள்ளோம்.

அதன் ஒரு கட்டமாக வட இலாகாவுடன் பேசி காணிகள் விடுவிக்கப் படுகின்றன. மத்திய தர வர்க்கத்தின் காணிகள் விடுவிக்கப்படுகின்றன. ஆவணங்கள் வழங்கப்படுகின்றன. எனவே, நாங்கள் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி வருகிறோம் எனத் தெரிவித்தார்.

# வவுனியா பிரதேச செயலகத்தின் பொதுமக்களுக்கான அறிவித்தல்

'புதிய நாடு புதிய கிராமம்' எனும் திட்டத்தின் மூலம் பதியப்படாத இறப்பு, பிறப்பு மற்றும் விவாகப் பதிவுகளை மேற்கொள்வதற்கான நடமாடும் சேவையை வவுனியா செயலகம் முன்னெடுக்கவுள்ளது.

குறித்த நடமாடும் சேவை வவுனியா பிரதேச செயலக குணநாயகம் மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் ஜூன் 09 ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை இடம்பெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் காலம் கடந்த பிறப்பைப் பதிவு செய்வதற்கான ஆவணங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் வவுனியா பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் கிளையில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் மேலதிக தகவல்களுக்கு 024 - 2221946 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வவுனியா பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

# புதிய ஆளுநர் செந்தில் தொண்டமான் கிழக்கில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவார்

## இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் வாழ்த்து



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தீர்க்கதரிசனமான செயற்பாடாகும். மூவின மக்களைக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாணத்தில் இனங்களுக் கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான இயலுமை ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு இருப்பதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராகப் பொறுப்பேற்றுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமானுக்கு வாழ்த்து தெரிவித்து விடுத்திருக்கும் செய்தியிலேயே கல்வி இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்டவை. ஆகவே, அந்த மாகாணங்களுக்கு தமிழ் பேசும் சமூகத்தைச் சார்ந்தோரே ஆளுநர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்பது எனது நிலைப்பாடு. அந்த வகையில் வடக்கு மாகாணத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் தமிழர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தமை அவரது தீர்க்கதரிசனமான சிந்தனையை வெளிப்படுத்தியிருக்கிறது.

குறிப்பிட்டுக் கூறுவதானால் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை வளர்த்தெடுப்பதற்குப் பதிலாக அதனை சீர்குலைக்கும் வகையில் செயற்படுவோருக்கு ஆதரவாகவே செயற்பட்டிருந்தமை தெளிவாகும்.

அவரது செயற்பாடுகள் தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அண்மைக்காலமாக அவருக்கு எதிராகவே எனது நிலைப்பாடும் இருந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். ஆளுநர்கள் ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதிகளாக செயற்படுபவர்கள். அவ்வாறிருக்கையில் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு மாறுபட்டவராகவே காணப்பட்டார். இதுவே அவரது பதவி பறிப்புக்கும் காரணமாகும்.

எப்படி இருப்பினும், கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பவர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற அமைப்பின் தலைவராக விளங்குகிறார். அவர் மக்களுடன் நல்லுறவைப் பேணுபவர். ஊவா மாகாணத்தில் அவரது செயற்பாடுகள் மெச்சத்தக்கவை. ஆகையால், கிழக்கு மாகாணத்தின் ஆளுநராகப் பதவியேற்றிருக்கும் செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாணத்தில் இருக்கக்கூடிய மூவின மக்களையும் அரவணைத்து இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதில் கிழக்கு மாகாணத்துக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான உறவுப்பாலமாக அமைவார் என்பது எனது நம்பிக்கை.

அவருக்கான நியமனம் தொடர்பில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்திருக்கும் அதைவேளை மலையக மக்களும் பெருமிதம் கொள்கின்றனர்.

அதேபோன்று, வடக்கு மாகாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அம்மையார் நன்கு அனுபவம் மிக்கவர் ஆவார்.

மக்களின் பால் நின்று செயற்படுகின்ற அம்மையாரின் ஒத்துழைப்புகளுடன் வடக்கு மக்களின் அபிலாஷைகள் நிறைவேற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் நுங்குத் திருவிழா





பாரம்பரிய தமிழர் பறை இசையுடன் நுங்குத் திருவிழா நிகழ்வு வவுனியா, மரக்காரம்பளையில் நேற்று (21) இடம்பெற்றது.

பனை மரத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் நோக்குடன் சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பனம்பொருள் உற்பத்திப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் பண்டாரவன்னியன் புத்தகசாலையின் புத்தகக் கண்காட்சியும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிகளவிலான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டதுடன், கடும் வெப்பத்தைப் போக்க நுங்கையும் குடித்து மகிழ்ந்தனர்.

சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக நான்காவது வருடமாகவும் குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டமை விஷேட அம்சமாகும்.

# அட்டுலுகம முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் புனரமைப்புக் கூட்டம்







(பேருவளை செய்தியாளர்)

பண்டாரகம, அட்டுலுகம முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் புனரமைப்புக் கூட்டம் களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத் தலைவரும் முன்னாள் களுத்துறை நகர பிதாவுமான எம்.எம. ஜவ்பர் தலைமையில் இடம்பெற்றது.

மாவட்ட செயலாளர் எம்.ஸம்ஸல் மக்கி, ஆசிரியர்களான முஹம்மத் இஹ்ஸான் முஹம்மத் கஸ்ஸாலி உட்படப் பலரும் கூட்டத்தில் உரையாற்றினர்.

இதன்போது அட்டுலுகம முஸ்லிம் லீக் வாலிப முன்னணிக்கான புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டதோடு சத்தியப்பிரமான நிகழ்வும் இடம்பெற்றது.

அட்டுலுகம பகுதி வாழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டதோடு பிரதேச இளைஞர் - யுவதிகளை இவ்வமைப்பில் இணைத்து எதிர்காலத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# பிணக்குகளைத் தீர்க்க அலுவலகம்





(அஷ்ரப் ஏ. சமத்)

கல்கிசை நீதிமன்றத்துக்கு எதிரே உள்ள தனியார் கட்டடத்தில் திருமணப் பிணக்குகளை தீர்த்து வைப்பதற்கு அலுவலகமொன்று தெஹிவளை,கல்கிசை பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் அனுசரணையுடன் வெள்ளிக்கிழமை (19) திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி சட்டத்தரணியும் தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தருமான கலாநிதி பாயிஸ் முஸ்தபா கலந்து கொண்டார்.

தெஹிவளை பள்ளிவாசல்கள் சம்மேளனம், மற்றும் முஸ்லிம் கல்வி வட்டம் ஊடாக திருமணம் முடிக்க இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு திருமணம் பற்றிய விரிவான மார்க்க சம்பந்தமான ஆலோசனைகளும் குறித்த அலுவலகத்தினூடாக வழங்கப்படும். அத்துடன், காதி நீதிமன்றத்துக்கு வரும் குடும்பப் பிணக்குகளை முன்கூட்டியே சமரசம் செய்து சமாதானப்படுத்துதல், அறிவுரை வழங்குதல், பிணக்குகளைத் தீர்த்தல், திருமண வாழ்க்கை முறைகளைப்பற்றி இஸ்லாம் மார்க்கத்தில் சொல்லப்பட்ட விளக்க வகுப்புகளை ஏற்படுத்துதல் போன்ற புதிய திட்டங்கள் குறித்த அலுவலகத்தினூடாக முன்னெடுக்கப்படவுள்ளன.

தெஹிவளை தெற்கு பிரதேசத்தின் புதிய காதி நீதிபதியாக சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எஸ்.எம். அம்ஹர் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

(மஸ்கெலியா செய்தியாளர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்சீக் தோட்டப் பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த இருவரை மஸ்கெலியா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸார் நடத்திய விசேட சுற்றிவளைப் பின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவின் பணிப்புரைக்கிணங்க மஸ்கெலியா பொலிஸார் விசேட சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போதே சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

மேலும், மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட போது அதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் மற்றும் கூடைகள் என்பனவும் கைப்பற்றப் பட்டுள்ளன.

இவர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது பொலிஸ் பிணையில் விடுதலை செய்வதற்கு அனுமதி வழங்கியதுடன் எதிர்வரும் 24ஆம் திகதி ஆஜர்படுத்துமாறு நீதிமன்றம் பணித்தது.



**இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியா, சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஜி.எம். அக்பர் அலி குடும்பத்தினரை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்ஹான் பீபி இப்திகார் தலைமையில் போரத்தின் உறுப்பினர்கள் சிலர் கொள்ளுப்பிட்டி மெரைன் பீச் ஹோட்டலில் நேற்று முன்தினம் (20) சந்தித்தனர.இச் சந்திப்பில் சிரேஸ்ட ஊடகவிலாளர் எம்.ஏ.எம். நிலாம்,ஊடகவியலாளர்களான சாதிக் சிஹான், ஜெம்சித் ஆகியோர் கலந்துகொண்டனர்.**

**(படம்:அஷ்ரப் ஏ. சமத்)**

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk — NLB

**வெள்ளிக்கிழமை 2023.05.19**

| சீட்டு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5119 | ரூ. 12,420,988.00 | N | 5 3 3 7 8 3 |
| கொவிசெத | 3361 | ரூ. 104,719,262.24 | A | 02 19 20 56 |
| ஜாதிக சம்பத | 1574 | ரூ. 11,137,388.00 | மேஷம் | 4 4 9 3 4 7 |
| தன நிதானய | 1149 | ரூ. 90,699,149.60 | B | 11 35 45 61 |
| ராசி சுப பலன் (Handahana) | 428 | ரூ. 2,524,846.20 | கும்பம் (விசேட இலக்கினம்: கும்பம்) | 07 26 45 58 |
| மெகா பவர் | 1467 | ரூ. 322,130,042.00 (அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00) | A (சுப்பர் இலக்கம் 09) | 24 29 50 52 |

**சனிக்கிழமை 2023.05.20**

| சீட்டு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5120 | ரூ. 14,385,328.00 | W | 1 7 6 0 2 8 |
| கொவிசெத | 3362 | ரூ. 105,096,840.64 | K | 42 46 56 63 |
| ஜாதிக சம்பத | 1575 | ரூ. 11,195,524.00 | துலாம் | 8 4 4 0 1 5 |
| தன நிதானய | 1150 | ரூ. 90,870,489.20 | M | 23 29 43 52 |
| ராசி சுப பலன் (Handahana) | 429 | ரூ. 2,500,000.00 | மீனம் (விசேட இலக்கினம்: மீனம்) | 29 42 48 55 |
| மெகா பவர் | 1468 | ரூ. 322,281,662.00 (அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00) | D (சுப்பர் இலக்கம் 22) | 22 26 44 49 |

# தலைமன்னார் பகுதியில் 3 மாணவிகளை கடத்த முயற்சி அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்ட சந்தேக நபர்கள்

(மன்னார் நகர் நிருபர்)

தலைமன்னார் பகுதியில் மூன்று மாணவிகளை கடத்த முற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு தலைமன்னார் பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களுக்கான அடையாள அணிவகுப்பில் மூன்று சிறுமிகளும் இரு சந்தேக நபர்களை அடையாளம் காட்டியுள்ளனர்.

தலைமன்னார் கிராமப் பகுதியில் மூன்று சிறுமிகளை வெள்ளை வேனில் கடத்த முற்பட்ட நிலையில் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு மன்னார் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான வழக்கு விசாரணை மீண்டும் வியாழக்கிழமை (18) மன்னார் நீதவான் நீதிமன்றில் நீதிபதி கே.எல்.எம். சாஜித் முன்னிலையில் அழைக்கப்பட்டு சந்தேக நபர்களை அடையாளம் காட்டுவதற்காக நீதிமன்றம் மூடப்பட்ட நிலையில் அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது.

இதன்போது பாதிப்புக்குள்ளான மூன்று சிறுமிகளும் இரு சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டியுள்ளனர்.

நடைபெற்ற இவ் அடையாள அணிவகுப்பு ஒரே நேரத்தில் இரு சந்தேக நபர்களுடன் மேலும் 14 பேர் இந்த அணிவகுப்பில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் நீதவான், முதலியார்,ஆராய்ச்சி மற்றும் இவ் வழக்குக்கு முன்னிலையாகும் சட்டத்தரணிகள் மட்டுமே மன்றுக்குள் இருந்த நிலையில் இச் சிறுமிகள் சந்தேக நபர்களை அடையாளம் காட்டியுள்ளனர்.

கடந்த 11.05.2023 அன்று வியாழக்கிழமை மாலை தலைமன்னார் கிராமப் பகுதியில் சிலுவைநகர் பகுதியில் வெள்ளை வேனில் சொக்கிலேற் பிஸ்கட் விற்பனைக்காகச் சென்றதாகக் கூறப்படும் இருவர் மூன்று சிறுமிகளையும் சொக்கிலேற் தருவதாக அழைத்து அவர்களை கடத்த முற்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து இவர்களை அக்கிராம மக்கள் பிடித்து தலைமன்னார் பொலிஸில் ஒப்படைத்திருந்திருந்தனர்.

சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணிகள் சர்மினி பிரதீபன்,அர்ஜுன் அரியரட்ணம்,




ரூபன்ராஜ் டபேரா மற்றும் டெனீஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகினர்..

இச்சந்தேக நபர்களை எதிர்வரும் 01 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

# வட மாகாண ஆளுநர் இன்று கடமையேற்பு

புதிதாக நியமனம் பெற்றுள்ள வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை(22) இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்தில் காலை 9.30 மணிக்கு குறித்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

முன்னாள் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மே 15ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் பதவி நீக்கம் செய்யப்பட்டநிலையில் மே 17 ஆம் திகதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் மூவர் பேராசிரியர்களாகப் பதவியுயர்வு






யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகவும், ஒருவர் இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். துறைக்குரிய இருக்கைப் பேராசிரியராக ஒரு பேராசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவருமாக இரண்டு சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகவும், விவசாய பீடத்தைச் சேர்ந்த ஒருவரை இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை அண்மையில் ஒப்புதல் வழங்கியதுடன் முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரைத் துறைக்கான இருக்கைப் பேராசிரியராக நியமிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் (20) சனிக்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் அன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றின் படி, முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தின் மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி (திருமதி) எஸ். எம். சி. மகேந்திரன் அலோசியஸ் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும் விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி பூ. ஐங்கரன் இரசாயனவியலில் பேராசிரியராகவும் விவசாய பீடத்தின் விவசாயப் பொருளியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. சூரியகுமார் விவசாயப் பொருளியலில் இணைப் பேராசிரியராகவும் பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.

இதேநேரம், முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தில் மனித வள முகாமைத்துவத் துறையில் பேராசிரியரும் (Professor in Human Resource Management) , மனித வள முகாமைத்துவத் துறைத் தலைவருமான பேராசிரியர் என் கெங்காதரன் மனித வள முகாமைத்துவத் துறைப் பேராசிரியராகப் (Professor of Human Resource Management) (துறைக்கான இருக்கைப் பேராசிரியர் - Cadre Chair professor ) பதவி உயர்த்தப்படுவதற்கான தெரிவுக் குழுவின் பரிந்துரையைப் பரிசீலனை செய்த பேரவை அதற்கான அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com




**நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழா எதிர்வரும் ஆகஸ்ட் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ள நிலையில், நல்லூர் கந்தன் பெருவிழாவுக்கான ஆலய சூழல் பராமரிப்பு, ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்தல், வீதித் தடைகள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழிசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ். மாநகரசபையினருக்கு ஆலய சம்பிரதாய முறைப்படி சனிக்கிழமை (20) பெருவிழா நாட்காட்டி அடங்கிய காளாஞ்சி ஆலயத்தினரால் கையளிக்கப்பட்டது. இந்த வைபவத்தின் போது பாரம்பரிய முறைப்படி யாழ். மாநகரசபை வளாகத்தில் வாழை, தோரணங்கள் கட்டி அலங்காரம் சிறப்பாக அமையப்பெற்றிருந்தமை சிறப்பம்சமாகும்.**

# சுதந்திரத்தின் பின்னரான உரிமைகளை அனுபவிக்க முடியாமல் வாழும் மக்கள்

## ‘மலையகம் 200’ நிகழ்வில் இராதா எம்.பி. உரை

(ஆ.ரமேஸ்)

ஆங்கிலேயரிடமிருந்து நாடு சுதந்திரம் பெற்ற போதிலும் அந்த சுதந்திரம் மூலம் கிடைக்கப்பெற்ற உரிமைகளை நாம் அனுபவிக்க முடியாமல் இன்றும் இந்த நாட்டில் எமது மக்கள் அடிமைகளாகவே வாழுகின்றார்கள் என்பதுதான் கவலைக்குரிய விடயமென மலையக மக்கள் முன்னனியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் நுவரெலியா புதியநகர மண்டபத்தில் நடைபெற்ற ‘மலையகம் 200’ நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தனதுரையில் தெரிவித்ததாவது:-

தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு நாட்கூலிகளாகவும் அடிமைகளாகவும் அழைத்துவரப்பட்ட எமது மூதாதையர்கள் வழிவந்த பரம்பரையினர் கடந்த 200 வருடங்களாக அனுபவித்த துன்ப -துயரங்களின் வரலாற்றின் கண்ணோட்டத்தைத் தெளிவுபடுத்தும் இந்த நிகழ்வைப் பாராட்டுகின்றேன்.

எமது சமூகத்திற்கு இந்த நாட்டில் என்ன நடந்துள்ளது என்று கடந்த 60, 70 வருடங்கள் தான் எங்களுக்குத் தெரியும். அந்த வகையில் கடந்த 1948 ஆம் ஆண்டு இந்த நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தாலும் இந்த சுதந்திரத்தை மலையக மக்கள் ஏற்றுக்கொள்ளவோ அனுபவிக்கவோ முடியாத சுதந்திரமாகவே இருக்கின்றது. ஏனென்றால், 1947 ஆம் ஆண்டு இந்தியாவிற்கும் 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கும் சுதந்திரம் கிடைத்தது.



சுதந்திரத்திற்கு முன்பும் சரி, சுதந்திரத்திற்கு பின்பும் சரி எமது சமுதாயம் அடிமைகளாகத்தான் இருக்கின்றது என்றுதான் கூறவேண்டும்.

1948 ஆம் ஆண்டிற்குப் பின் இந்த நாட்டில் வாழும் ஏனையோருக்கு பிரஜாவுரிமை, வாக்குரிமைக்கான உரிமை, சுய மரியாதை இருந்தன. ஆனால், மலையக மக்களுக்கு பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் அடியோடு பறிக்கப்பட்டது. நாடரற்றவர்களாக நாங்களும் வாழ்ந்திருக்கின்றோம்.

அதற்குப் பின் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் படிப்படியாக மாற்றமடைந்து எமது மக்களுக்கு பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் வழங்கப்பட்டது.

கல்வியறிவு இல்லாமல் இருந்து தற்பொழுது கல்வியறிவுள்ள சமுகமாக மாற்றமடைந்து வருகின்றது. சுகாதாரத் துறையிலும் சற்று மாற்றம் வருகின்றது. அதேபோல சமூகமும் சற்று மாறிவருகின்றமை வரவேற்கத்தக்க விடயம்.

எதிர்காலத்திலும் இந்த மக்களின் அபிவிருத்திக்காக பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டியிருப்பதால் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என்றார்.

# மலையகம் முன்னேற்றமடையாமைக்கு முன்னைய ஆட்சியாளர்களே காரணம்

## ‘மலையகம் 200’ நிகழ்வில் திகா எம்.பி. திட்டவட்டம்

(ஆ.ரமேஸ்)



‘மலையகம் 200’ வருட நிகழ்வைக் கொண்டாடும் அளவிற்கு மலையக மக்கள் முன்னேற்றமடையவில்லையென்று சொல்கிறார்கள் உண்மைதான். ஆனால், அதற்கு மலையகத்தை ஆட்சிசெய்தவர்கள் தான் பொறுப்புக் கூற வேண்டும் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தொழிலாளர் தேசிய சங்கத் தலைவருமான பழனி திகாம்பரம் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

நுவரெலியாவில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பாடுசெய்திருந்த ‘மலையகம் 200’ வரலாற்று நிகழ்வின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில் தெரிவித்ததாவது:-

எனக்கு இந்த நிகழ்வு புதியதல்ல. நான் மலையகத்தில் பிறந்து அந்த மக்களுடன் வாழ்ந்து அந்த மக்களுடைய கஷ்டங்களைத் தெளிவாகத் தெரிந்து கொண்டவன்.

என்னுடைய அப்பா அம்மா தோட்டத்தில் தொழிலாற்றியவர்கள். சாதாரண வாழ்விலிருந்து நான் என்னை வளர்த்துக்கொண்டு பாராளுமன்றம் சென்று மக்களுக்கு சேவையாற்றி வருகின்றேன். அரசியல் வாதிகள் அதைச் செய்வார்கள் - இதைச் செய்வார்கள் என்று எதிர்பார்த்தால் ஒன்றுமே நடக்காது. எனவே, மலையகத்தில் பிறந்த எல்லோரும் தமது முயற்ச்சியினால் மேலோங்க வேண்டும். ஆகவே, இந்த நிகழ்வு மலையக மக்களுக்கும் சரி, அரசாங்கத்திற்கும் சரி, இந்திய அரசாங்கத்திற்கும் சரி ஓர் எடுத்துக்காட்டு நிகழ்வாகும்.

நமது வாழ்வியல் நிலைமை குறித்து இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் ஏனையவர்களுக்கும் தெட்டத்தெளிவாகத் தெரியும்.

எதிர்காலத்தில் ஜனாதிபதியாக சஜித் பிரேமதாச தெரிவாகுவார். அவரது அரசாங்கத்தில், நல்லாட்சியின்போது நாம் முன்னெடுத்த அபிவிருத்திப் பணிகளைச் செய்வோம் என்றார்.

# அஸ்கிரிய பீடத்தில் ஆசி பெற்றார் ஜீவன்



நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் கண்டி அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரை நேற்று முன்தினம் (20) சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

இதன்போது மகாநாயக்கர்களின் ஆசியுடன் இந்து மற்றும் பௌத்த மத நல்லிணக்கத்திற்கான பல்வேறு செயற்பாடுகளைத் தாம் முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு மறைந்த பெருந் தலைவர்களான அமரர். சௌமியமூர்த்தி தொண்டமான், அமரர். ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரின் காலம் தொட்டு கண்டி அஸ்கிரிய பீடத்துடன் நல்லதொரு தொடர்பைப் பேணிவருவதையும் அமைச்சர் சுட்டிக்கட்டி நினைவுகூர்ந்தார்.

இந்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்ட நிதியுதவியைக்கொண்டு கோவில்கள் மற்றும் பௌத்த விகாரைகளை மேம்படுத்தும் பணிகளைப் புரிந்துணர்வுடன் முன்னெடுப்பது தொடர்பிலும் இங்கு ஆலோசிக்கப்பட்டது.

அதனையடுத்து நாடு நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிசெய்வதற்கும் மக்களின் பாதுகாப் பிற்கும் அவசியமான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்திய மகாநாயக்க தேரர், அமரர் ஆறுமுகன் தொண்டமான் மற்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் மூலம் அஸ்கிரிய பீடத்திற்கு கிடைத்த உதவிகளுக்கும் நன்றி தெரிவித்தார். மேலும் இளம் அரசியல் தலைவர் என்ற வகையில் துடிப்புடன் செயற்படும் அதேநேரம், நாட்டின் அபிவிருத்தி மற்றும் இன நல்லிணக்கத்திற்கான பணிகளை முன்னெடுப்பதோடு அனைவரினதும் ஒற்றுமையைப் பாதுகாக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பின் போது அமைச்சருடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி உட்பட சில முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# நானுஓயாவில் இளைஞர் தற்கொலை

(செ.திவாகரன்)

நானுஓயா ரயில் நிலையத்துக்கு முன்பாக தண்டவாளத்தில் தலை வைத்து இளைஞர் ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொட்டகலை ரயில் நிலையத்திலிருந்து நானுஓயா ரயில் நிலையத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை இரபு சென்ற ரயிலில் தலை வைத்து இவர் உயிரிழந்துள்ளார்.

நீண்ட நேரம் காத்திருந்து யாரும் கவனிக்காத நேரத்தில் நடைமேடையில் இருந்து வேகமாகப் பாய்ந்து ரயில் பெட்டிகளுக்கு கீழே தண்டவாளத்தில் தலையை வைத்துபடுத்து அதன் சக்கரத்தில் சிக்கி இளைஞர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த இளைஞன் நுவரெலியா லபுக்கலை பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளங்கோவன் கோவர்தனன் என்பவராவார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞரின் தற்கொலைக்கான காரணம் தெரியவராத நிலையில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மலையகப் பணிப்பெண்களின் மரணப் பட்டியல் தொடர்கிறது

## வீட்டுவேலை தொழிலாளர் சங்கம் குற்றச்சாட்டு

(ஜே.எம்.ஹாபீஸ், ஆர்.ஏ. இராமன்)

வீட்டுப் பணிப் பெண்களாகச் சென்ற மலையக யுவதிகளின் மர்ம மரணப்பட்டியல் ஹிசாலினி, ரம்யா, தற்போது ராஜகுமாரி என நீண்டு கொண்டு போவது கடும் விசனத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தி உள்ளது என வீட்டு வேலை தொழிலாளர் சங்கம் நேற்றுமுன்தினம் (20) தெரிவித்தது.

கண்டியில் உள்ள வீட்டு வேலைத் தொழிலாளர் சங்க தலைமையகக் கட்டிடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அதன் தலைவி திருமதி சத்தியவாணி சரசகோபால் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம், இலங்கையில் வீட்டு வேலைத் தொழிலாளர்களுக்கென்று தொழில் சட்டதிட்டங்கள் முறையாக இல்லாத காரணத்தாலேயே இவ்வாறான துரதிஷ்ட சம்பவங்கள் ஏற்படுகின்றன. இதுபோன்ற விடயங்கள் இனிமேலும் ஏற்படாது தடுக்க அரசு அதற்கான சரியான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

நாம் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஒரு தொழிற் சங்கம் என்ற வகையில், நாட்டில் பரந்த அளவில் எமது அங்கத்தவர்கள் உள்ளனர். எனவே, தொழிலாளர்கள் என்ற வகையில் ஏதும் அநீதி ஏற்பட்டால் சங்கம் என்ற வகையில் எம்மால் ஒருபோதும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இலங்கையில் பொதுவாக எல்லாத் தொழில்களுக்கும் நியதிகளும் - பிரமாணங்களும்




ஏன் சட்ட விதிகளும் கூட உள்ளன. அதனூடாக குறிப்பிட்ட துறையைச் சேர்ந்த தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால், வீட்டு வேலைத் தொழிலைப் பொறுத்தவரை சட்ட அங்கீகாரம் இல்லாத காரணத்தால் பல்வேறு சிரமங்களுக்கு அவர்கள் முகம்கொடுக்கின்றனர் - ஆளாகின்றனர். இறுதியில் உயிரிழப்புகள் வரை செல்கின்றன.

அந்த வரிசையில் முன்னர் ஹிசாலினி ஜூட், பின்னர் ரம்யா போன்றவர்களைப் பார்த்தோம். அவர்களது மரணத்திற்கான காரணமோ - சரியான நியாயமோ இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. நிலைமை இப்படி இருக்க, அந்த வரிசையில் கடந்த வாரம் புதிதாக ஆர். இராஜகுமாரி என்ற பணிப்பெண் மரணமடைந்த செய்தியும் எமக்குக் கிடைத்துள்ளது.

அவர் கொல்லப்பட்டாரா? கொலை செய்யப்பட்டாரா? அல்லது இயற்கையாகவே மரணித்தாரா? - என்பது இன்னும் தெளிவாக வெளிவரவுமில்லை - புலப்படவுமில்லை. ஆனால், மலையகத்தின் அவலங்களாகவே இப்பிரச்சினைகள் உள்ளன. எனவே, இது போன்ற விடயங்கள் தொடர்ந்து இடம்பெறுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றார்.

# வடக்கில் டிப்ளோமா போதனாசிரியர்கள் ஆசிரிய சேவைக்குள் உள்ளீர்ப்பு

## கல்வி அமைச்சின் செயலாளர் உமாமகேஸ்வரன்



தேசிய கல்வியியல் கல்லூரிகளில் தேசிய போதனாவியல் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்தவர்கள் வடமாகாண பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அ. உமா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், வடமாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளுக்கு நியமனத்துக்காகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விபரங்களை www.np.gov.lk என்ற வட மாகாண சபை இணையத்தளத்திற்கூடாகவும் www.cfmin.mp.gov.lk என்ற வட மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளத்திற்கூடாகவும் அறிந்து கொள்ள முடியும்.

தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை வட மாகாண கல்வி அமைச்சில் இடம் பெறவுள்ளது. இவ் விடயம் தொடர்பாக இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேர ஒழுங்குக்கமைவாக கீழ்வரும் ஆவணங் களுடன் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் வருகை தர வேண்டும்.

தேசிய அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி,பிறப்புப் பதிவுச் சான்றிதழ் பூரணப் படுத்தப்பட்ட தகவல் படிவம் , திருமணமானவர்கள் விவாகச் சான்றிதழ் என்பவற்றை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# கிளிநொச்சி ஆலய வளாக நில அளவை தடுத்து நிறுத்தம்

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை





கிளிநொச்சி உருத்திரபுர ஈஸ்வரர் ஆலய வளாகத்தில் தொல்பொருள் திணைக்களத்தினரால் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த நில அளவை செயற்பாடு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வின் தலையீட்டினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த பிரச்சினை தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவிடம் முறையிட்டிருந்த நிலையில், அதுகுறித்து ஜனாதிபதியிடம் அமைச்சர் தெளிவுபடுத்தியதன் விளைவாக நில அளவைப் பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர் கோ.றுஷாங்கன் குறித்த பிரதேசத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்ததுடன், ஆலய நிர்வாகசபை உறுப்பினர்கள், பக்தர்கள், பிரதேச மக்கள் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தினார். மேலும் இவ்விடயம் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்ற அமைச்சரின் செய்தியையும் தெரிவித்துள்ளார்.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் பசுபதிப்பிள்ளை, உப தலைவர் சிவஞானசுந்தரம், செயலாளர் கமலக்கண்ணன் ஆகியோர் அமைச்சரின் இணைப்பாளருடன் நீண்ட நேரம் கலந்துரையாடியதுடன் நில அளவைப் பணிகள் நிறுத்தப்பட்டமைக்கு நன்றியையும் தெரிவித்தனர், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத் தருமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

# கிளிநொச்சியில் நினைவேந்தல்





முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றது.

முன்னாள் அரசியல் துறை போராளியும் சமத்துவக் கட்சியின் மாவட்ட அமைப்பாளருமான வேங்கை தலைமையில் இடம் பெற்ற இந்நினைவேந்தல் நிகழ்வில் கிளிநொச்சி வர்த்தக சங்கத்தின் முன்னாள் தலைவர் இராமன் பொதுச் சுடரினை ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட அனைவருக்கும் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து மலரஞ்சலியை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆரம்பித்து வைக்க ஏனையவர்களும் மலர் தூவி அஞ்சலிசெலுத்தினார்கள். மேலும் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் இதன்போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கறுவா செய்கை ஊக்குவிப்பு வட்டுக்கோட்டையில் செயலமர்வு





வடபகுதியில் கறுவா செய்கையை ஊக்குவிக்குமுகமாக ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வு வட்டுக் கோட்டை பங்குரு முருகன் கோவில் சமூக மண்டபத்தில் சனிக்கிழமை இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜீ. ஜீ. ஜெயசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வடக்கில் கறுவாச் செய்கையை மேற் கொள்வதற்கான வாய்ப்புகள் தொடர்பாக விளக்கமளித்தார்.

கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் பலரும் இந்தச் செயலமர் வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்ததுடன் பொதுமக்களின் சந்தேகங் கங்களையும் தீர்த்துவைத்தனர்.

# யுத்தத்தால் உயிரிழந்த மூவின மக்களுக்கும் வவுனியாவில் அஞ்சலி; சமாதானப் புறாக்களும் பறக்க விடப்பட்டன







(வவுனியா நிருபர்)

யுத்தத்தால் உயிரிழந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு வவுனியாவில் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், சமாதானப் புறாக்களும் பறக்கவிடப்பட்டன.

வன்னி மக்கள் ஒன்றியம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு வவுனியா மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் இந்த நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒரு தாய் பிள்ளைகளாக ஒற்றுமையாகவும் - சமாதானமாகவும் வாழ்ந்து வருகின்றார்கள். யுத்தத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் பலர் இறந்துள்ளார்கள். அவர்களுக்கு ஆத்ம சாந்தி வேண்டி பௌத்த பிக்குகள், இந்து மதகுருமார், கத்தோலிக்க மதகுருமார், இஸ்லாமிய மதகுரு ஆகியோரின் ஆசிகளுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பிரதான சுடரினை மதத் தலைவர்களும் அதிதிகளும் ஒன்றிணைந்து ஏற்றி வைக்க, ஏனைய சுடர்களை பொதுமக்கள் ஏற்றி வைத்ததுடன் இறந்தவர்கள் நினைவாக தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன. அத்துடன், சமாதானத்தையும் - ஐக்கியத்தையும் வலியுறுத்தி மதத் தலைவர்களால் புறாக்களும் பறக்கவிடப்பட்டன.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராஜா, இலங்கை தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட செயலாளர் என்.கருணாநிதி, சிவசேனை அமைப்பினர், வர்த்தக சங்கத் தலைவர், முச்சக்கரவண்டி சங்கத் தலைவர், வவுனியா கந்தசாமி கோவில் நிர்வாகத்தினர், ஐக்கிய தேசியக் கட்சியினர், நடைபாதை வியாபாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்ட பிரச்சினைகளைத் தீர்க்க செயலாளர் அலுவலகம்

## ஜனாதிபதி பணிப்பு



விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகளை காண்பதற்காக விவசாய நவீனமயப் படுத்தல் செயலாளர் அலுவலகம் ஒன்றை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடு களுக்கான கொள்கைகளைத் தயாரிப்பது தொடர்பில் 19ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பொன்றின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத் திட்டதுடன் இணைந்து செயற்படும் ஜனாதிபதி செயலகம், விவசாய அமைச்சு உட்பட ஏனைய அமைச்சுகளின் மேலதிக செயலாளர்கள் மற்றும் அவர்களுக்கு இணையான தரங்களில் உள்ள அதிகாரிகளை மேற்படி அலுவலகத்துக்காகப் பெயரிடுமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு அறிவுறுத்தியதோடு இந்த வேலைத்திட்டத்துக்கு தனியார் துறையின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளுமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும், முப்படையினரையும் உள்வாங்கி மேற்படி நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி அறிவுரை வழங்கினார்.

தேயிலை, தெங்கு, இறப்பர், நெல், கறுவா, மீன்பிடி போன்ற துறைகளில் துறைசார் ஆய்வுச் செயற்பாடுகளை அரச மற்றும் தனி யார் துறைகள் இணைந்து மேற்கொண்டு விவசாய நவீனமயப் படுத்தல் செயலகத்தின் வேலைத்திட்டங்களை வெளிப்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இதன்போது அரசாங்க நிறுவனங்களின் வழி காட்டல்களின் கீழ் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளினதும் பங்கேற்புடன் முன்னோடிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான இயலுமை குறித்தும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

விவசாய நவீனமயப்படுத்தல் செயலகத்தின் செயலாற்றுகை முன்னேற்றம் தொடர்பான அறிக்கையொன்றை ஜூலை மாதம் தன்னிடம் கையளிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

அத்தோடு விவசாயத்துக்கான காணிகளை விடுவிப்பது தொடர்பான விடயங்களை விவசாய செயலாளர் அலுவலகத்துக்கு அறிவித்த பின்னர் தீர்வுக்கான பரிந்துரைகளை தனக்கு தெரியப்படுத்துமாறும் தெரிவித்தார். பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் காமினி சேனநாயக்கவின் தலைமையில் நிறுவப்பட்டுள்ள விவசாய நவீனமயப்படுத்தலுக்கான குழுவின் புத்தாக்க செயற்பாடுகள் தொடர்பிலும் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டது.

மேற்படி விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தின்போது அது குறித்த தெரிவுகளைக் கொண்டிருக்கும் தனியார் துறையின் முக்கியஸ்தர்கள், துறைசார் தெரிவுகளைக் கொண்ட அரச துறையின் முக்கியஸ்தர்கள் மற்றும் இளையோரின் பங்களிப்பைப் பெற்று கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார்.

பெருந்தோட்டச் செய்கை, மீன்பிடித்துறை, மீன் வளர்ப்பு , பூக்கள் உற்பத்தி, மரக்கறி, பழங்கள் மற்றும் தானிய வகைகள், பால், முட்டை உள்ளிட்ட அனைத்து தொழில்துறைகளும் நவீன மயப் படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தினார்.

2048 இல் அபிவிருத்தி அடைந்த இலங்கை யைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டம் தொடர்பில் உரிய துறை வர்த்தகர்களை தொடர்புபடுத்திக் கொண்டு அமைச்சுச் செயலாளர்களின் தலைமையில் நிறுவப்படும் உப குழுக்கள் வாயிலாக கலந்தாலோசித்து எடுக்கப்படும் தீர்மானங்களையும் தனக்கு தெரியப்படுத்துமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, உரிய அமைச்சுகளின் செயலாளர்கள், அரச மற்றும் தனியார் விவசாயத் துறைசார் அதிகாரிகள் எனப் பலர் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

# பஸ்ஸுக்காக காத்திருந்த மாணவி விபத்தில் சிக்கி பலி!

(கண்டி நிருபர்)



பஸ்தரிப்பிடத்தில் பஸ்ஸுக்காக காத்திருந்த 17 வயது மாணவி ஒருவர் வாகனத்தில் மோதுண்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குருநாகல், உஹுமிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம்(20) இடம் பெற்றுள்ளது. குருநாகல், உஹுமிய பிரதேசத் திலுள்ள பாடசாலையொன்றில் 11 ஆம் தரத்தில் கல்வி கற்கும் சித்துமினி ராஜகுரு ( வயது - 17) என்ற மாணவியே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

குருநாகல் பிரதேசத்தில் தனியார் வகுப்பு ஒன்றுக்குச் செல்வதற்காக பஸ்ஸுக்காக காத்திருந்தபோதே மேற்படி அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

வீதியில் பயணித்த மோட்டார் வாகனம் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி மாணவிமீது மோதி பின்னர் தொலைபேசிக் கம்பம் ஒன்றிலும் மோதியுள்ளது.

இச்சம்பவத்தில் சாரதி கைதுசெய்யப் பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற் கொண்டுள்ளனர்.







**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் மாதாந்தம் நடத்தும் (சுபாவித கீ) இசைநிகழ்ச்சி (19) வெள்ளிக் கிழமை காலை கொழும்பு அனுலா மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷீம் உமர் நிகழ்வில் பங்கேற்ற மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார். பாடசாலை அதிபர் விஷாகா ராஜபக்ஷ உட்பட ஆசிரியைகள் மாணவிகள் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.**

# தமிழ் மக்கள் கூட்டணியின் இலவசக் கருத்தரங்கு









தமிழ் மக்கள் கூட்டணியின் கல்வி மேம்பாட்டுப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு நேற்று(21) ஆரம்பமானது.

சித்தங்கேணிச் சந்தியிலுள்ள மகா கணபதி மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை(21) காலை 8.30 மணிக்கு கருத்தரங்கு ஆரம்பமானது.

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்குடனேயே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கணித பாட ஆசிரியர் அமரர் செல்லையா தவராஜாவின் ஞாபகார்த்தமாக தமிழ் மக்கள் கூட்டணியின் கல்வி மேம்பாட்டுப் பிரிவு குறித்த இலவசக் கல்விக் கருத்தரங்கை ஏற்பாடு செய்தது.

கருத்தரங்கில் பங்கு பற்றும் மாணவர்களுக்கு கொழும்பு பிரபல பாடசாலைகளின் வினாத்தா ளுடன் கூடிய கையேடுகள் மற்றும் கருத்தரங்கில் பங்குபற்றுவதற்குத் தேவையான எழுதுகருவிப் பொருட்களும் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பின ருமான க.வி.விக்னேஸ்வரன், சட்டத்தரணி வி.மணிவண்ணன், கட்சியின் கல்வி மேம்பாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் வ.பார்த்தீபன், கணித, ஆசிரியர் அமரர் செல்லையா தவராஜாவின் குடும்பத்தினர், அனுசரணையாளர்கள், வளவாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களைக் கொண்டதாக அமைந்த இக்கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை (22) காலை 8.30 மணிக்கு யாழ்ப் பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள DCM கல்வி நிலையத்தில் நடை பெறும்.

# பசுமைப்புரட்சியை ஏற்படுத்த தென்னை மரங்கள் நடல்



(திகாமடுல்ல செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தில் பசுமைப்புரட்சியை ஏற்படுத்துவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரபினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு மில்லியன் மரங்களை நடும் வேலைத்திட்டத்தின் கீழ் மருதமுனை கடற்கரை பிரதேசத்தை கடல் அரிப்பிலிருந்து தடுப்பதற்கும் கடற்கரையின் அழகினை பேணுவதற்குமாக தென்னை மரங்கள் நடப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினரின் கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவுக்கான இணைப்பாளர் பி.எம்.முகம்மட் ஜஃபரின் ஏற்பாட்டில் மருதமுனை கடற்கரைப் பிரதேசத்தில் இடம்பெற்ற மரம் நடுகை நிகழ்வில் முசாரப் எம்.பி. பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மரங்களை நட்டு வைத்தார்.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் அமீர், சரோ குழுமத்தின் பணிப்பாளர் தாஜுதீன், பாராளுமன்ற உறுப்பினரின் ஒலுவில் பிரதேச இணைப்பாளர் எம்.ஜே.எம்.அஸ்ஹர், அட்டாளைச்சேனை மத்திய குழுவின் செயலாளர் ஏ.எல்.கியாஸதீன், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் முஹம்மட் ஷா, சம்ஸ் மத்திய கல்லூரியின் 91 பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் பல்வேறு சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

'மரங்களை வளர்க்கும் மனங்களை வளர்ப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் எதிர்வரும் ஐந்து வருடத்துக்குள் ஒரு மில்லியன் மரங்களை அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் நடுவதற்கான நோக்கோடு இவ்வேலைத்திட்டம் இடம்பெற்று வருகின்றது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அட்டாளைச்சேனை, இறக்காமம், திருக்கோவில், நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, மருதமுனை, பானம, அக்கறைப்பற்று, சாய்ந்தமருது, பாலமுனை, ஒலுவில் ஆகிய பிரதேசங்களில் இவ்வேலைத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வீடுகள், பொது இடங்கள், கடற்கரைப் பிரதேசங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மத ஸ்தாபனங்கள், வயல் காணிகள் உள்ளிட்ட சகல இடங்களிலும் பொதுமக்களின் பங்களிப்புடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# கல்லடி தரிசனம் பாடசாலை ஆண்டு விழா







(கல்லடி செய்தியாளர்)

கல்லடி தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலையின் 31ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் ஞாயிற்றுக்கிழமை (21) மேற்படி பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை அதிபர் எஸ். இதயராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் பிரதம அதிதியாகவும் மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.லிங்கேஜ்வரன் சிறப்பு அதிதியாகவும் மண்முனை வடக்கு சமூகசேவை உத்தியோகத்தர் எஸ்.ராஜ்மோகன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது 31ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டதுடன் தரிசனம் பாடசாலை மாணவர்களின் பேச்சு, பாடல் ஆகிய நிகழ்வுகள் அரங்கேறின. இந்நூற்றாண்டுக் கொண்டாட்டத்தில் தரிசனம் பாடசாலை உப தலைவர் முருகு தயானந்தன், முன்னாள் தலைவர் எஸ்.ரவீந்திரன், தரிசனம் பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மறைந்த துறைரெட்ணசிங்கத்தின் இரண்டு வருட பூர்த்தியினை முன்னிட்டு கந்தளாயில் 120 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. கந்தளாய் பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கந்தளாய் பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம் மற்றும் கந்தளாய் விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கே இவ்கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதன்போது மறைந்த பாராளுமன்ற உறுப்பினரின் பிள்ளைகள், கந்தளாய் சிவன் கோவில் தலைவர், பாடசாலை அதிபர்கள், சங்கங்களின் தலைவர்கள், பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (கந்தளாய் செய்தியாளர்)



கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) இருமொழி பிரிவு மாணவி ஆர்.எம்.அம்னா ருஹி பொதுநலவாய கட்டுரைப் போட்டியில் தேசிய மட்டத்தில் ஆங்கில மொழியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். கல்வியமைச்சில் அண்மையில் (16) நடைபெற்ற பொதுநலவாய கட்டுரைப் போட்டியில் தேசிய மட்ட வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் இவருக்கான சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)






ஹிந்து சுயம் சேவா சங்கம் நாடளாவிய ரீதியில் பெண் தலைமை தாங்கும் 10 ஆயிரம் பேருக்கு உலருணவு வழங்கும் திட்டத்தினை மட்டக்களப்பு ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் சனிக்கிழமை (20) ஆரம்பித்து முதற்கட்டமாக பெண் தலைமை தாங்கும் 176 பெண்களுக்கு வழங்கப்பட்டது. அமெரிக்கா சேவா சர்வதேச பவுண்டேசன் அனுசரணையுடன் ஆறுமுக நாவலர் அமைப்பின் திட்டத்தில் முதற்கட்டமாக பெண் தலைமை தாங்கும் 10 ஆயிரம் பேருக்கு சுயம் சேவா சங்க கிழக்கு மாகாண தலைவர் அருணாச்சலம் ரவீந்திரன் தலைமையில் உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (கனகராசா சரவணன்)



மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மாணவி அப்துல் புஹாரி ஸெரின் பினேஷா அதி சிறந்த கட்டுரைக்கான தேசிய விருதைப் பெற்றுள்ளார். பொதுநலவாய நாடுகளின் ஐம்பதாவது அமைப்பு தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே கல்வியமைச்சு நடத்திய தேசிய ரீதியிலான கட்டுரை தமிழ்ப் பிரிவுப் போட்டியிலேயே சான்றிதழ் விருதைப் பெற்றுள்ளார்.

இவர் ஆசிரியத் தம்பதியான அப்துல் புஹாரி - கமீதா ஆகியோரின் புதல்வியாவார். (மருதமுனை செய்தியாளர்)





காத்தான்குடி மட்/மம. பதுரிய்யா வித்தியாலயத்தில் தரம் 01 க்கு அனுமதிபெற்ற புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் வை.எம்.ரிப்கான் தலைமையில் வெள்ளிக்கிழமை (19) இடம்பெற்றது. இந்நிகழ்வில் உலமாக்கள், ஊடகவியலாளர்கள், பிரமுகர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டதுடன் அதிதிகள் மற்றும் மாணவர்களினால் மரக்கன்றுகள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (காத்தான்குடி செய்தியாளர்)

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# 'ஆரக்ஷாவ' ஓய்வூதியத் திட்ட விழிப்புணர்வு நிகழ்வு



(மட்டக்களப்பு)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஓய்வூதிய திட்டமான 'ஆரக்ஷாவ' ஓய்வூதியத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையில் அண்மையில்(17) மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் பிரதேச செயலக சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.

இவ்ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்தவராக இணைந்து கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த ஜி.சாருகேசன் எனும் மாணவனுக்கான 10ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் மற்றும் பாடசாலை அதிபர் மூலம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இச்சமூக பாதுகாப்பு சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஓய்வூதிய திட்டமான பிள்ளைகளுக்கு இளவயதிலே ஓய்வூதியம் உரித்தாவதை உறுதிப்படுத்துதல், சுதந்திரமாக மேற்கொள்வதற்கான தொழிலினை மேற்கொள்ளத் தீர்மானிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் நோக்குடனும் தயாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் அம்பாறை, நாவிதன்வெளி பிரதேசத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வின் பூஜை வழிபாடுகள், அஞ்சலிப் பிரார்த்தனைகள் வியாழக்கிழமை(18) இடம்பெற்றன. இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (வாழைச்சேனை செய்தியாளர், பாறுக் ஷிஹான்)



அகதிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை பள்ளத்தோட்டத்தில் முள்ளிவாய்க்கால் நினைவையொட்டி கஞ்சி பரிமாறி நினைவுகூரப்பட்டது. (கந்தளாய் செய்தியாளர்)





கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தியவட்டவான் கிராம சேவகர் பிரிவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் சனிக்கிழமை (20) மேற்கொள்ளப்பட்டது. தியவட்டவான் சமுர்த்தி உத்தியோகத்தர் என்.எம்.எச்.முகம்மட் மேற்பார்வையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அப் பகுதி சமுர்த்தி பயனாளிகள் கலந்து கொண்டு சிரமதானத்தை மேற்கொண்டனர். இதன்போது, ஆயுர்வேத மத்திய மருந்தக வளாகம், காலித் இப்னு வலீத் ஜும்ஆப் பள்ளிவாசல் வளாகம் உட்பட பொது இடங்கள் துப்புரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மீராவோடை செய்தியாளர்)





மட்டக்களப்பு மாவட்ட மண்முனை மேற்கு, வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் வியாழக்கிழமை(18) பிரதேச செயலாளர் எஸ்.சுதாகரன் தலைமையில் இடம்பெற்றது. இச்சிரமதான நிகழ்வு பிரதேச செயலக வளாகம் உட்பட அதனை அண்டிய பகுதிகள் சுத்தப்படுத்தப்பட்டன. பிரதேச செயலகப் பிரிவின் பதவி நிலை, கிராம, சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச மக்கள் எனப் பலரின் பங்களிப்புடன் இந்நிகழ்வு இடம்பெற்றது. (மட்டக்களப்பு)








மே-18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இறுதி நாள் நிகழ்வுகள் மட்டக்களப்பு கிரான் சின்னவெம்பு கிராமத்தில் ஈகைச் சுடரேற்றியும் மலரஞ்சலி செலுத்தியும் வியாழக்கிழமை(18) காலை அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது உயிர்நீத்தவர்களின் நினைவாக தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன. தமிழர் தாயக மக்கள் அமைப்பின் இணைப்பாளர் குருசுமுத்து வி.லவக்குமார் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களின் நினைவேந்தல் தொடர்பாக உரையாற்றினார். (வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

# கல்முனை பஸ்தரிப்பு நிலையத்தை புனரமைக்க பயணிகள் கோரிக்கை





(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனையில் அமைக்கப்பட்டுள்ள பஸ்தரிப்பு நிலையம் பொதுமக்களின் பாவனைக்குதவாத இடமாக மாறி வருகின்றது. எனவே, குறித்த பஸ் தரிப்பு நிலையத்தில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து அவற்றைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இங்குள்ள பஸ் தரிப்பு நிலைய கூரைகள் இடிந்து விழும் நிலையிலும் புறாக்கள், பாம்புகள் உள்ளிட்ட விஷ ஜந்துகள் வாழ்கின்ற வாழ்விடமாகவும் துர்நாற்றம் வீசுகின்ற இடமாகவும் காணப்படுகின்றது.

இது தவிர, பஸ் தரிப்பிடத்துடன் இணைந்துள்ள மலசலகூடம் உடைந்த நிலையிலும் உரிய பராமரிப்பின்றியும் காணப்படுகின்றது. மேலும் குறித்த பஸ் தரிப்பிடத்தில் அமைந்துள்ள சிறு உணவகத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர் உரிய முறையில் அகற்றப்படாமையினால் அவ்விடத்தில் துர்நாற்றம் வீசுகின்றது. கடந்த காலங்களில் கல்முனை பஸ் நிலையம் சகல வசதிகளுடனும் கூடிய நவீன மயப்படுத்தப்படவுள்ளது என அரசியல்வாதிகள் பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டிருந்தும் கூட இவ்வாறு மக்களின் பாவனைக்குதவாத இடமாக மாறி வருகின்றமையானது உரிய பராமரிப்பின்மையை காட்டுகின்றது.

அத்துடன், அம்பாறை மாவட்டத்தில் முக்கிய வர்த்தக கேந்திர நிலையமாகக் கருதப்படுகின்ற கல்முனை பஸ்தரிப்பு நிலையம் இவ்வாறு குறைகளுடன் காணப்படுவது தொடர்பில் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கும் அதேவேளை, பஸ் தரிப்பிடத்தைப் புனரமைப்பு செய்து தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## பொதுமக்களின் முயற்சியால் வடிகான்கள் துப்புரவு

(இஸ்மாயில்புரம் செய்தியாளர்)

மாளிகைக்காட்டில் நீண்ட காலமாக கவனிப்பாரற்றிருந்த வடிகானை பொதுமக்களாக முன்வந்து துப்புரவு செய்துள்ளனர்.

காரைதீவு பிரதேச சபைப் பிரிவுக்குட்பட்ட மாளிகைக்காடு கிழக்கு ஜுனைட் வீதியின் வடிகான் நீண்ட காலமாக துப்புரவு செய்யப்படாமல் மோசமாக பாதிக்கப்பட்டிருந்ததையடுத்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு பலமுறை அறிவித்தும் எவ்வித பலனும் கிட்டவில்லை.

இதனால் பொறுமையிழந்த அவ்வீதியில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் சிலர் ஒன்றிணைந்து அந்த வடிகானின் ஒரு பகுதியை சிரமதான அடிப்படையில் அண்மையில் துப்புரவு செய்துள்ளமை பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

தமது கோரிக்கை தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தாமல் காலங்கடத்தியதையடுத்து இவ்வாறான முயற்சியை தாம் மேற்கொள்ள முன்வந்ததாகத் தெரிவிக்கும் இம்மக்கள், தம்மால் முடியுமானளவு இதனைச் செய்ததாகவும் வடிகானின் முழுப்பகுதியும் துப்புரவு செய்யப்படுவதன் மூலமே இப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வைக் காணமுடியும் எனவும் தெரிவித்தனர்.



இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுப்பதுடன் இவ்வடிகான்களில் தொடர்ச்சியாக நீர் தேங்கி நிற்பதால் டெங்கு போன்ற தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

## போடியார் புலம்பல்!



**தமிழ்கட்சிகளுடன் தாம் ஆரம்பித்துள்ள தீர்வுக்கான பேச்சு வெற்றியடையும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக ஜனாதிபதி ரணில் சொல்லியிருக்காரு எலுவா? அவரு சொல்லுறத்த பார்த்தா கடந்த நல்லாட்சி அரசு காலத்தில் அடுத்த பொங்கலுக்கு இடையில.. தீபாவளிக்கு இடையில தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும் எண்டு கூட்டமைப்பு தலைவர் சம்பந்தரு சொன்ன கத மாதிரி எலுவா இவரும் நம்பிக்கையாக வெற்றியடையும் எண்டு சொல்லுறாரு பாப்பமே இவருட கதய!**

# திருகோணமலைக்கு குடிநீர்க் குழாய் பொருத்தும் நடவடிக்கை ஆரம்பம்

### கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை விஸ்தரிக்கவும் ஏற்பாடு







திருகோணமலை பகுதியில் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் புல்மோட்டை, நிலாவெளி, சாம்பல்தீவு மற்றும் ஆனந்தகுளம் ஆகிய பகுதிகளை இணைக்கும் குடிநீர் விநியோகத்துக்கான குடிநீர் குழாய் பொருத்தும் நடவடிக்கை நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

67.3 மில்லியனுக்கும் அதிகமான நிதியுதவியினூடாக மேற்கொள்ளப்படும் இத்திட்டம் 28 கிலோ மீற்றர் பரப்பைக் கொண்டது. இந்தத் திட்டம் நிறைவடைந்தவுடன் 300இற்கும் அதிகமான புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுவதுடன் திருகோணமலை நகரம் மற்றும் அதை அண்டியுள்ள கிராமப் பகுதிகளுக்கும் தடையின்றி குடிநீர் வழங்கப்படும்.

இதேவேளை, திருகோணமலை, கந்தளாய் ஆகிய நகரங்கள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்துக்கு கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் பார்வையிட்டதுடன் அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

தற்போதைய நிலைவரம் மற்றும் விஸ்தரிப்புக்கான தேவைப்பாடுகள் பற்றியும் விரிவாகக் கேட்டறிந்து கொண்டார். இந்நிகழ்வில் அமைச்சர் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஷ்வரன், கபில அத்துகோரல, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதித் தலைவர் சஞ்சீவ விஜேகோன், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கிழக்கு மாகாணத்துக்கான பிரதி பொது முகாமையாளர் எம்.எம்.நசீல், உதவி பொது முகாமையாளர் டீ.ஏ.பிரகாஷ், பிராந்திய முகாமையாளர் பீ.சுதாகரன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## இரண்டாம்கட்ட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்







(மாளிகைக்காடு செய்தியாளர்)

ஜனாதிபதியின் டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர ஆணையாளர் அஸ்மி ஆதம்லெப்பையினால் முன்னெடுக்கப்பட்ட இரண்டாம்கட்ட டெங்கு ஒழிப்பு சிரமதானம் ஞாயிற்றுக்கிழமை(21) கல்முனை வடக்கு பிரதேசத்தில் இடம்பெற்றது.

கல்முனை மாநகர சபை சுகாதாரப் பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தர் சிரேஷ்ட ஊடகவியலாளர் யூ.எம்.இஸ்ஹாக் தலைமையில் கல்முனை வடக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, மணற்சேனை ஆகிய கிராமங்களில் இந்த சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் கல்முனை மாநகர சபை சுகாதாரப் பிரிவின் சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர் ஏ.எம்.அதுகம் உட்பட உதவி மேற்பார்வை உத்தியோகத்தர்களான ஈ.இராகவன், ஆர்.லிங்கராஜா, எம்.எம்.எம்.றிஸ்வான் ஆகியோரும் மாநகரசபை சுகாதார ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

# புதிய ஆளுநர் கிழக்கு மாகாணத்தை உயர் பரிமாணத்துக்கு இட்டுச்செல்வார்

### கருணாகரம் எம்.பி. நம்பிக்கை



(புளியந்தீவு, வாழைச்சேனை செய்தியாளர்கள்)

கிழக்கு மாகாணத்துக்கு புதிய ஆளுநராக நியமனம் பெற்ற செந்தில் தொண்டமானை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் நேரில் சென்று சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

மேலும், கிழக்கு மாகாணத்தைப் புதியதொரு பரிமாணத்துக்கு உயர்த்துவார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டெனவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஆளுநர் அநுராதா யஹம்பத் பெரும்பான்மையினத்துக்கே சேவை செய்தார். பல்லினம் சமாதானமாக வாழுகின்ற ஒரு மாகாணத்தில் ஆளுநர் ஒருவர் தமது இனத்தைத் தவிர மற்றைய இனங்களுக்கு எரிச்சலூட்டும் செயற்பாடுகளை முன்னெடுத்திருக்கக்கூடாது. அவர் மேல் கொண்ட வெறுப்பால் எமது மக்கள் புதிய ஆளுநரை திரண்டுவந்து மாலை சூட்டி வரவேற்கின்றார்கள்.

கிழக்கு மாகாணத்துக்கு தமிழ்மகனொருவன் முதல்முதலாக ஆளுநராக வந்திருப்பதும் மலையகத்தின் மைந்தனொருவருக்கு உயர்ந்த ஆளுநர் பதவி கிடைத்திருப்பதும் எமக்கு மனம் நிறைந்த சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் தருகிறது. அவர் கிழக்கு மாகாணத்தை உயர்ந்த பரிமாணத்துக்கு கொண்டுவருவார் என்பதில் நாம் அசையாத நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

அத்துடன், ஆளுநரிடம் முதற் கோரிக்கையாக அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மத்தியில் பேசுபொருளாக இருந்த எழுவான்கரையில் இருந்து படுவான்கரைக்கான பாதைப் பயணத்துக்கு பொதுமக்களிடமிருந்து பணம் அறவிடும் விடயம் தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தார்.

முன்னாள் ஆளுநர் ஏற்கனவே பொருளாதார நிலையில் நலிவுற்றிருக்கும் மக்களைக் கருத்திற் கொள்ளாமல் பாதைப் போக்குவரத்துக்கு கட்டணம் அறவிடுவதற்கான உத்தரவைப் பிறப்பித்திருந்தார். தற்போது புதிய ஆளுநராக வந்திருக்கும் தாங்கள் வறிய நிலை மக்களுக்குள் இருந்து அவர்களின் நன்மை தீமை அனைத்தையும் அனுபவித்து இன்று இந்நிலைக்கு உயர்ந்துள்ள ஒருவர்.

எனவே, எமது மக்களின் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு முன்னாள் ஆளுநரால் கொண்டுவரப்பட்ட இப்பாதைப் போக்குவரத்துக்கு கட்டணம் அறவிடுகின்ற விடயத்தை நிறுத்தி முன்னர் இடம்பெற்றது போன்றே இலவச சேவையை வழங்க வேண்டும் என்று கருணாகரன் எம்.பி. தெரிவித்ததற்கமைவாக இவ்விடயத்துக்குக் கொள்கை அளவில் ஆளுநரால் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நுண்கடன் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு

(மாளிகைக்காடு செய்தியாளர்)

சிறுதொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் நிதி கையாளல் மற்றும் நுண்கடன் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் வழிகாட்டலில் சாய்ந்தமருது விதாதவள நிலையத்தில் சாய்ந்தமருது உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வளவாளராக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஐ.எம்.நாசர், மத்திய வங்கியின் திருகோணமலைக் கிளையின் முகாமையாளர் பி.நிரோஷன் ஆகியோர் கலந்துகொண்டதுடன் அதிதிகளாக




விஞ்ஞான, தொழில்நுட்ப உத்தியோகத்தர் யூ.எம்.முஸம்மில், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வி.நஸ்லா, பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் ஏ.அபிறா, சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்களான எம்.எம்.நாஸிர் அலி மற்றும் எம்.ஐ.எவ்.சுசான் சிஹ்னாஸ் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# எல்லைக்கல் இடப்பட்ட காணிகளை விடுவிப்பது குறித்த கலந்துரையாடல்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வன வளத்திணைக்களத்தினால் எல்லைக்கல் இடப்பட்ட காணிகளை விடுவிப்பு செய்தல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

மாவட்டத்தில் வன ஜீவராசிகள், பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வனவள பாதுகாப்பு திணைக்களங்களினால் வர்த்தமானியிடப்பட்ட நிலங்களை யுத்தத்துக்கு முற்பட்ட காலங்களில் மக்கள் பரம்பரை பரம்பரையாகக் குடியிருந்த நிலையில் அங்கு பயிர்ச் செய்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வனவளத் திணைக்களத்தினால் எல்லைக்கல் இடப்பட்டதால் தோன்றிய முரண்பாடுகளை தவிர்க்கும் முகமாக அக்காணிகளை விடுவிப்பு செய்வதற்கும் மற்றும் மாவட்டத்தில் வர்த்தமானி செய்யப்படாத அடர்ந்த காடுகளாகக் காணப்படும் பிரதேசங்களை வர்த்தமானியில் உள்வாங்குவதற்குமான ஆரம்பகட்ட கலந்துரையாடலாக இது அமைந்திருந்தது.

இக் கலந்துரையாடலின்போது வன பாதுகாவலர் கே.எம்.ஏ.பண்டார, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன், வன பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள், மகாவலி அதிகார சபையின் உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், நில அளவை திணைக்கள உயர் அதிகாரிகள், வன வளத்திணைக்கள, வனஜீவராசிகள் திணைக்கள, காணிப்பயன்பாட்டு, காணி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# பேஸ்புக்கில் மாவீரர் நாள் புகைப்படத்தை பதிவிட்டமை: கைதுசெய்யப்பட்ட சோபனன் வழக்கிலிருந்து விடுதலை

(கிரான் செய்தியாளர்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த கருணாகரன் சோபனன் குறித்த வழக்கிலிருந்து வெள்ளிக்கிழமை(19) விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நகர்த்தல் பத்திரத்தின் மூலம் ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிக்கையின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

குறித்த வழக்குக்கு சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் மற்றும் சட்டத்தரணி ரணித்தா



ஆகியோரின் ஆலோசனையின் பேரில் சட்டத்தரணி பி.ஜெயசிங்கம் ஆஜராகியிருந்தார்.

இவர் பேஸ்புக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் நாள் தொடர்பான புகைப்படத்தை பதிவிட்டமை தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டு கடந்த 26.11.2020ஆம் திகதி ஏறாவூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். தொடர்ந்து ஒரு வருடமும் 3 மாதங்களும் மட்டக்களப்பு சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். பின்னர் 2022.01.27ஆம் திகதியன்று நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இருந்தபோதிலும், இவரது வழக்கு இதுவரை நடைபெற்றுக்கொண்டே வந்தது. அதனடிப்படையில், இவ்வழக்கிலிருந்து விடுதலை கிடைத்துள்ளது. அத்துடன், இவர் பட்டதாரி பயிலுனர் நியமனம் கிடைத்து மூன்று மாதத்தில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாஸா வாகனத் தரிப்பிடத்துக்கு காணி ஒதுக்கீடு

(இஸ்மாயில்புரம் செய்தியாளர்)

மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஜனாஸா வாகனத் தரிப்பிடத்துக்கென காரைதீவு பிரதேச செயலாளரினால் அரச காணியொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பினால் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட ஜனாஸா வாகனத்தைப் பாதுகாப்பான முறையில் தரித்து வைப்பதற்கான வசதிகள் ஏதும் இல்லாத காரணத்தினால்



அதனை முறையாகப் பராமரிக்க முடியாதிருந்தமை தொடர்பாக காரைதீவு பிரதேச செயலாளரின் கவனத்துக்கு கொண்டுவந்ததையடுத்து, அவரது முயற்சியின் காரணமாக தற்போது தமக்கு அரச காணியொன்று ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைப்பின் தலைவர் ஏ.எல்.இம்தியாஸ் தெரிவித்தார்.

மாளிகைக்காடு மத்தி தோணி வீதியிலுள்ள 25 அடி நீளமும் 35 அடி அகலமும் கொண்ட இவ் அரச காணிக்கான உத்தியோகபூர்வ அனுமதிக் கடிதத்தை காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவரிடம் கையளித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக உடனடியாக கவனத்துக்கு கொண்டுவந்து உரிய தீர்வைப் பெற்றுத்தந்த பிரதேச செயலாளர் உள்ளிட்ட அனைவருக்கும் மாளிகைக்காடு பொதுநல அமைப்புகளும் மக்களும் நன்றி தெரிவிக்கின்றனர்.

# சர்வதேச சட்டங்களை உலக நாடுகள் மதிக்க வேண்டும்

## ரஷ்ய - உக்ரைன் பிரச்சினை பேச்சுமூலம் தீர்க்கப்படும் - ஜி7 மாநாட்டில் வலியுறுத்து




''உக்ரைன் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மற்றும் இராஜ்ஜிய ரீதியிலேயே தீர்வு காணப்படவேண்டுமென்றும் ஐ.நா. மற்றும் சர்வதேச சட்டங்களை உலக நாடுகள் மதித்து நடக்கவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜி7 நாடுகளின் உச்சி மாநாடு ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இதில் அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, பிரித்தானியா உள்ளிட்ட உறுப்பு நாடுகளும் இந்தியா, பிரேஸில் உள்ளிட்ட நட்பு நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றுள்ளனர். மாநாட்டில் பங்கேற்ற பிரதமர் மோடி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை ஆரத்தழுவி வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடியை உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார். அப்போது உக்ரைன் போரை நிறுத்த அனைத்து முயற்சிகளையும் இந்தியா மேற்கொள்ளுமென்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார்.

கடந்த ஆண்டு பெப்ரவரியில் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இந்தப் போருக்குப் பின்னர் முதன்முறையாகப் பிரதமர் நரேந்திர மோடியும் உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியும் ஜப்பானின் ஹிரோஷிமாவில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

அப்போது பிரதமர் நரேந்திரமோடி, ''உக்ரைன் போர் என்பது பொருளாதாரம், அரசியல் சார்ந்தது கிடையாது. இது மனிதகுல பிரச்சினை. போரை நிறுத்த அனைத்து முயற்சிகளையும் இந்தியா மேற்கொள்ளும். என்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வேன்'' என்று உறுதியளித்துள்ளார்.

**மோடி- பைடன் சந்திப்பு**

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான், இந்தியா ஆகிய 4 நாடுகள் இணைந்து குவாட் அமைப்பை உருவாக்கியுள்ளன. இந்த அமைப்பு ஆசியாவின் நேட்டோ என்றழைக்கப்படுகிறது. குவாட் அமைப்பின் கூட்டம் அவுஸ்திரேலியாவில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டதால் அந்தக் கூட்டம் ஜப்பானின் ஹிரோஷிமாவுக்கு மாற்றப்பட்டது.

இதன்படி ஹிரோஷிமாவில் நேற்றுமுன்தினம் குவாட் அமைப்பின் கூட்டம் நடைபெற்றது. இதில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ், ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடோ, இந்திய பிரதமர் மோடி ஆகியோர் பங்கேற்றனர். அப்போது சர்வதேச அரங்கில் சீனாவின் அத்துமீறல்கள், ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. குறிப்பாக, தென்சீனக் கடலில் சுதந்திரமான போக்குவரத்தை உறுதி செய்வது குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசும்போது, "உலகத்தின் நன்மை, உலக மக்களின் நலன், வளம், அமைதிக்காக குவாட் அமைப்பு தொடர்ந்து பாடுபடும். அடுத்த ஆண்டில் இந்தியாவில் குவாட் கூட்டம் நடத்தப்படும்" என்று தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவிக்கையில்,

''உலகத்தை மாற்றும் வலிமை குவாட் அமைப்புக்கு உள்ளது. இந்திய பெருங்கடல், பசுபிக் பெருங்கடல் பிராந்தியம் மட்டுமன்றி, ஒட்டுமொத்த உலகத்திலும் குவாட் அமைப்பால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். கடந்த 2 ஆண்டுகளாக குவாட் நாடுகளின் ஒத்துழைப்பு மேம்பட்டு வருகிறது'' என்று தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா, ஜப்பான் பிரதமர்களும் சர்வதேச அரங்கில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக தங்கள் கருத்துகளை முன்வைத்தனர்.

இதேவேளை, ஜி7 அமைப்பு சார்பில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் "போர் நீடிக்கும் வரையில் உக்ரைனுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படும். நிதி, இராணுவ, மனிதாபிமான உதவிகள் தொடரும். உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்யாவை சீனா வற்புறுத்த வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, 2ஆம் உலகப்போரின்போது ஹிரேஷிமாவில் நடத்தப்பட்ட அணுகுண்டுத் தாக்குதலில் உயிர்நீத்தவர்கள் நினைவாக அமைக்கப் பட்டுள்ள அமைதிப் பூங்காவில் ஜி7 நாடுகளின் தலைவர்கள் கூட்டாகச் சென்று அஞ்சலி செலுத்தினர்.



**இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் நினைவு தினமான நேற்று(மே 21) டில்லியில் அவரது நினைவிடத்தில் சோனியா, ராகுல், பிரியங்கா, காந்தி ஆகியோர் மரியாதை செலுத்தியபோது....**

உலக செய்திகள்

## பராக் ஒபாமா உட்பட 500 அமெரிக்கர்களுக்கு ரஷ்யா தடை



அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகளுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், தங்கள் நாட்டுக்குள் நுழைவதற்கு முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா உள்ளிட்ட 500 அமெரிக்கர்களுக்கு ரஷ்யா தடை விதித்துள்ளது.

மேலும், ரஷ்யா மீதான விரோதமான ஒரு தாக்குதல் கூட தண்டிக்கப்படாமல் போகாது என்பதை வொஷிங்டன் நீண்ட காலத்துக்கு முன்பே கற்றுக்கொண்டிருக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளது.

உளவு பார்த்ததாக சந்தேகத்தின் பேரில் கடந்த மார்ச் மாதம் அமெரிக்கா வோல் ஸ்ட்ரீட் ஜர்னல் பத்திரிகையின் செய்தியாளர் இவான் கொர்ஸ்கோவிச் சில இரகசியத் தகவல்களை இடைமறித்து சேகரிக்க முயன்ற குற்றத்துக்காக ரஷ்ய உளவுப் பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் உக்ரைன் போர் காரணமாக அமெரிக்கா, ரஷ்யா இடையே உறவுச் சிக்கல் வலுத்த நிலையில் இந்தக் கைது நடவடிக்கை நடந்துள்ளது. இவான் கார்ஸ்கோவிச்விடம் ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் வழங்கிய பத்திரிகையாளர் அங்கீகார அடையாள அட்டை உள்ளது.

இருப்பினும், அவரை உளவாளி என ரஷ்யா கைதுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இம்ரான் கான் வீட்டில் பொலிஸ் சோதனை: தப்பியோட முயன்ற 6 பயங்கரவாதிகள் கைது



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் வீட்டில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்ததையடுத்து நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் அங்கு சோதனை நடத்தினர்.

அண்மையில் இம்ரான் கான் வீட்டில் 40 பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாகவும் அவர்களை 24 மணி நேரத்துக்குள் ஒப்படைக்கும்படியும் அவரது கட்சிக்கு அந்நாட்டுப் பொலிஸார் அறிவுறுத்தியிருந்தனர். இந்நிலையில், வழங்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்ததையடுத்து லாகூரிலுள்ள இம்ரான் வீட்டில் அதிரடியாக உள்ளே நுழைந்து பொலிஸார் சோதனை நடத்தினர்.

வீட்டின் முன்பக்க மற்றும் பின்பக்க வாயில் என அனைத்து இடங்களிலும் சோதனை நடைபெற்றது. இம்ரான் வீட்டிலிருந்து தப்பிச்செல்ல முயன்ற 6 பயங்கரவாதிகளைக் கைதுசெய்ததாக லாகூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## உதைபந்தாட்ட மைதானத்தில் கூட்ட நெரிசல்; 12 பேர் உயிரிழப்பு; 90 பேர் படுகாயம்



எல் சால்வடோரில் உதைபந்தாட்ட மைதானத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளதுடன் 90 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

மத்திய அமெரிக்க நாடான எல் சால்வடோரின் தலைநகர் சான் சால்வடோரிலுள்ள கஸ்கட்லான் மைதானத்தில் நேற்றுமுன்தினம் (மே 20) அலியான்ஸ் மற்றும் FAS ஆகிய இரு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியைக் காண ஆயிரக்கணக்கான ரசிகர்கள் முண்டியடித்துக்கொண்டு மைதானத்துக்குள் நுழைந்தனர். இதனால் அங்கு கடும் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்த நெரிசலில் பலரும் மூச்சுத்திணறி மயங்கி வீழ்ந்தனர்.

இதில் 12 பேர் உயிரிழந்திருப்பதாக முதற்கட்டத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் சிறுவர்கள் உட்பட 90 இற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து குறித்து முழுமையான விசாரணை நடத்தப்படும் என்று சல்வடோர் ஜனாதிபதி நயீப் புகேலே உறுதியளித்துள்ளார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## மூன்றாவது தடவையாக இலங்கை கிரிக்கெட்டின் தலைவராக ஷம்மி சில்வா



இலங்கை கிரிக்கெட் சபையின் அடுத்த இரு ஆண்டுகளுக்கான 2023 - 2025 தலைவராக மூன்றாவது தடவையாக ஷம்மி சில்வா போட்டியின்றித் தெரிவானார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் 62ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. இதன்போது இலங்கை கிரிக்கெட்டின் தற்போதைய தலைவர் ஷம்மி சில்வா, ஜயந்த தர்மதாஸ மற்றும் சமந்த தொடன்வல உள்ளிட்டோர் தலைவர் பதவிக்காகப் போட்டியிட்டனர். எனினும், ஜயந்த தர்மதாஸ மற்றும் சமந்த தொடன்வல ஆகிய இருவரும் தலைவர் பதவிக்கான வேட்பு மனுவை மீளப் பெற்றதையடுத்து ஷம்மி சில்வா ஏகமனதாகப் போட்டியின்றி மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

தற்போதைய செயலாளர் மொஹான் டி சில்வா ஏகமனதாகப் போட்டியின்றி 3ஆவது தடவையாகத் தேர்வானார். உப தலைவர்களாக மீண்டும் ஜயந்த தர்மதாச மற்றும் ரவீன் விக்ரமரட்ன ஆகிய இருவரும் போட்டியின்றித் தெரிவாகினர். உப செயலாளராக கிரிஷாந்த கபுவத்த தெரிவாக, பொருளாளராக சுஜீவ கொடலியத்த தெரிவாகினர்.



**வாழைச்சேனை பிறைந்துரைச்சேனை மெகா விளையாட்டுக் கழகத்தின் நான்காவது மேலங்கி அறிமுக நிகழ்வு அண்மையில் கழகக் காரியாலயத்தில் தலைவர் ஏ.யூ.எம். நளீம் (ஸலாமி) தலைமையில் நடைபெற்றது. இதன்போது ஆகிப் ஹுஸைன் கராத்தே போட்டியில் சிறப்பு தேர்ச்சியை பெற்றுக்கொண்டமைக்காக நினைவுப்பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.**

**(பாண்டிருப்பு நிருபர்)**

## மருதமுனை மரு கெபிட்டல் அணி சம்பியனானது




**(றாசிக் நபாயிஸ்)**

நாவிதன்வெளி எதிரொலி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள 64 கிரிக்கெட் கழகங்கள் பங்குகொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் மருதமுனை மரு கெபிட்டல் அணி சம்பியனானது.

64 கழகங்கள் அணிக்கு 11 பேர் 8 ஓவர்கள் கொண்ட இச்சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டியில் பழுகாமம் சூட்டிங் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மருதமுனை மரு கெபிட்டல் அணி சம்பியனானது. இச்சுற்றுப்போட்டியில் அரையிறுதிப் போட்டியின் ஆட்ட நாயகன் றோஷன் றிஷா, இறுதி போட்டியின் ஆட்ட நாயகன் சிபார் நௌபர் ஆகியோருக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

## துறைநீலாவணை மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி



**(எருவில் செய்தியாளர்)**

பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள துறைநீலாவணை மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் தி.ஈஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சி. ஸ்ரீதரன் பிரதம அதிதியாகவும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகம் சிறப்பு அதிதியாகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பு.திவிதரன் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட கம்பர் இல்லத்துக்கான வெற்றிக் கிண்ணத்தை பிரதம அதிதி யாகக் கலந்து சிறப்பித்த பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சி. ஸ்ரீதரன் மற்றும் அதிதிகள் இணைந்து வழங்கி வைத்தனர்.

## 14இல் 12 முறை பிளேஆஃப் நுழைந்த சென்னை

டெல்லி கெப்பிடல்ஸ் அணியை வீழ்த்தியதன் மூலம் நடப்பு சீசனில் 2வது அணியாக சென்னை சுப்பர் கிங்ஸ் பிளேஆஃப் சுற்றுக்குள் நுழைந்தது. இதன்மூலம் அவ்வணி 12ஆவது முறையாக பிளேஆஃப் சுற்றுக்கு தகுதி பெற்றது.

தற்போது நடைபெறும் 16ஆவது சீசனையும் பொறுத்து, இதுவரை 12 முறை பிளேஆஃப்க்குள் நுழைந்த ஒரே அணியாக சென்னை அணி புதிய சாதனை படைத்தது. அதாவது சென்னை அணி, பங்கேற்ற 14 சீசன்களில் (2 சீசன்களில் சென்னை அணி பங்கேற்கவில்லை) 12 முறை பிளேஆஃப்க்குள் நுழைந்துள்ளது. நடப்பு ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிஇ 14 போட்டிகளில் விளையாடி, அதில் 8 வெற்றி, 5 தோல்விகளுடன் 17 புள்ளிகளைப் பெற்று 2வது இடத்தை பிடித்தது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7